நவம்பர் 01, 2020

# இலக்கு

இதழ் 102

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

## யாழ்.குடாநாட்டு இடப்பெயர்வு என்பது ஒரு சம்பவமாக கடந்து செல்லமுடியாத வரலாறு





வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## ‘தண்டனை விலக்கீட்டை முடிவுறுத்து உண்மையை உயிர்ப்பித்திரு’



பி.மாணிக்கவாசகம்

## எமது தாயகப் பகுதிகளை பாதுகாக்கும் இறுதிக் கட்டத்தில் நாம் இருக்கின்றோம்


வா. கிருஸ்ணா





## கொரோனாவிலிருந்து இலங்கை தப்புமா? தவறான முகாமைத்துவம் பெரும் அழிவை ஏற்படுத்தும்

சமுதாய மருத்துவ நிபுணர்
முரளி வல்லிபுரநாதன்



## பூர்வீகக் குடிமக்கள் சார்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை உதாசீனம் செய்கிறது அமெரிக்கா

தமிழில் ஜெயந்திரன்

## தடத்திற்கு தடை தரலாமா?

முனைவர் ஆ. குழந்தை சென்னை





## பொம்பியோ தொடுத்த தாக்குதல் சீனாவின் பக்கத்திலா இலங்கை?

அகிலன்

## தமிழ் அரசன் பண்டாரவன்னியன் நினைவு நாள்




ஆங்கிலேயப் படைகளை பலமுறை வெற்றி கொண்ட வீரன் பண்டாரவன்னியனின் நினைவு நாள் நேற்று (31) ஆகும்.

ஆங்கிலேயரின் முல்லைத்தீவுக் கோட்டையைத் தாக்கி, அங்கிருந்த பீரங்கிகளைக் கைப்பற்றி நிமிர்ந்த வீரன் பண்டாரவன்னியன். நவீன போர்க் கருவிகள் கொண்ட வொன் ரிபேக் (Lt. von Driberg)கின் படைகளை பலமுறை விரட்டியடித்த இந்த மாவீரனை காக்கைவன்னியன் என்னும் துரோகியின் துணை கொண்டு ஆங்கிலோயர் வீழ்த்தினர்.

இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிராக பல மன்னர்கள் போராடியிருந்தாலும், பண்டாரவன்னியனையே ஆங்கிலேயர்கள் பெரும் சவாலாக கருதினார்கள். அதனால் தான் தமது வேறெந்த வெற்றிகளையும் கருத்தில் கொள்ளாத அவர்கள் பண்டாரவன்னியனை வெற்றி கொண்டதை மட்டும் கல்லில் பொறித்தார்கள்.

இந்த நினைவுக்கல் ஆங்கிலேயரின் வெற்றி பற்றிய மனப்பதிவுகளை ஏற்படுத்துவதற்கு பதிலாக ஒரு தமிழ் மன்னனின் வீரத்தை அவன் சார்ந்த இனத்தின் வீரத்தை பறைசாற்றி நின்றது. மேலும் ஒரு காலத்தின் வரலாற்றுப் பதிவாகவும் அமைந்தது. இதனால் தான் இந்த நினைவுக்கல் சிங்களப் படைகளால் சிதைக்கப்பட்டது.

கற்கள் சிதைக்கப்பட்டாலும் அந்த மண்ணில் விதைக்கப்பட்டவை என்றும் அந்த மண்ணை விட்டு போகாது; மக்கள் மனம் விட்டு மாறாது.

நன்றி: வன்னி மகன்

## கூட்டமைப்பின் செயலாளராக மாவை நியமனம்
## – பங்காளிக் கட்சிகள் முடிவு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டமைப்பில் அதிரடியான மாற்றங்களைச் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் இன்று கூடிய பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதன்படி கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக, இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா நியமிக்கப்படவுள்ளார்.

யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கை தமிழ் அரசு கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பங்காளிக் கட்சிகளின் கூட்டத்தில் அதிரடியான மாற்றங்கள் சிலவற்றை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் மாவை. சேனாதிராசா, சீ.வீ.கே.சிவஞானம், ப.சத்தியலிங்கம் ஆகியோரும், புளொட் சார்பில் த.சித்தார்த்தன், பா.கஜதீபன், க.சிவநேசன் ஆகியோரும், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தேர்தல்கள் திணைக்களத்தால் அண்மையில் விடுக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றை சுட்டிக் காட்டிய சீ.வீ.கே.சிவஞானம், கூட்டணிக் கட்சி

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## இந்தியப் பிரதமருடன் தனியாக பேச சம்பந்தர் ஆர்வம்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தனியாக சந்தித்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்கு விரும்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பக்லேயிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை(29), இந்திய தூதுவருடன் அவரின் இல்லத்தில் இடம்பெற்ற பேச்சுக்களின் போதே சம்பந்தர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலையில் சிறீலங்கா அரசு உள்ளது. தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியப் பிரதமரை சந்திக்க வேண்டும். 1.2 பில்லியன் ரூபாய்கள் செலவில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுள்ள கலாச்சார நிலையத்தை திறப்பதற்கு இந்திய பிரதமர் வருகை தர வேண்டும் எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தரின் இந்த கோரிக்கைகளை தான் இந்திய பிரதமரிடம் தெரிவிப்பதாக கோபால் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. நிகழ்வுக்கு மஹிந்த பிரதம விருந்தினரா? மனித உரிமைகள் கண்காணிப்பகம் சாடல்

"ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டமையானது, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் முகத்திலறையும் செயலாகும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடுமையாகச் சாடியுள்ளது.

மேலும் "போர்க் குற்றங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகக் குற்றம்சாட்டப்பட்டிருப்பவர்களின் பொதுவான பிம்பம் துடைத்தெறியப்படுவதற்குத் துணைபுரியக்கூடிய செயல்களில் ஐ.நா ஈடுபடக் கூடாது. ஆனால் கடந்த வாரம் அத்தகையதொரு செயலையே இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகம் செய்தது" என்று என்றும் அது குற்றம்சுமத்தியுள்ளது.

ஐ.நாசபை உருவாக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளமையை முன்னிட்டு இலங்கை யிலுள்ளஐ.நா.அலுவலகத்தால் இணைய வழி நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் பிரதம விருந்தினராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இலங்கையில் பரவும் கொரோனா, அதிக வீரியம் கொண்டது!



இலங்கையில் கோவிட்-19 தொற்று காரணமாக இதுவரை 10,424 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் இந்த மாத ஆரம்பத்தில் மினுவங்கொட ஆடைத் தொழிற்சாலையில் கொரோனா தொற்றாளர்கள் மீண்டும் கண்டறியப்பட்ட நிலையில், அன்றிலிருந்து கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவ ஆரம்பித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து, பேலியகொட மீன் சந்தையில் கொரோனா தொற்றாளர் ஒருவர் இனங் காணப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்தும் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதன் காரணமாக நாடு முழுவதும் கொரோனா தொற்று பரவும் அபாயத்தில் உள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில், இலங்கையில் தற்போது பரவி வரும் கோவிட்-19 வைரஸானது, மிகவும் வீரியம் கொண்டது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தெரிவிக்கின்றது.

இந்த தகவலைத் தொடர்ந்து இலங்கையில் தற்போது பரவிவரும் வைரஸானது, 'B.1.42' என்ற

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## கொச்சிக்கடை தேவாலயத்திற்கு சென்ற பொம்பியோ



சிறீலங்காவுக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோ கடந்த ஆண்டு புனித ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதலில் அதிகளவு மக்கள் கொல்லப்பட்ட கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு சென்று இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருந்தார்.

அமெரிக்கப் பாதுகாப்புப் படையினரின் அதி உயர் பாதுகாப்புடன் சென்ற பொம்பியோ தேவாலயத்தின் மதகுருவையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

## எதிர்வரும் வருட நடுப்பகுதியிலேயே தடுப்பு மருந்து கிடைக்கும்

எதிர்வரும் வருடத்தின் நடுப்பகுதியிலேயே கொரோனா வைரசிற்குரிய தடுப்பு மருந்து பாவனைக்கு வரும் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

கோவிட்-19 வரைஸ் நோய் எதிர்ப்பு தடுப்பு மருந்துக்காக 180 நாடுகள் உலக சுகாதார நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளன. ஆனால் தடுப்பு மருந்தின் பரிசோதனைகள் மூன்றாவது கட்டத்திலேயே தற்போது உள்ளது. அதன் பின்னர் பரிசோதனை முடிவுகளை ஆய்வு செய்த பின்னரே மருந்தை விநியோகம் செய்யமுடியும். எனவே அது அடுத்த வருடத்தின் நடுப்பகுதியிலேயே சாத்தியமாகும் என உலக

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

*நவம்பர் 01, 2020*

***நவம்பர் 2ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கை ஒழிப்பதற்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட செய்தி***

***ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்காத வரலாற்றைக் கொண்ட நாடு இலங்கை!***

***- சுதந்திர ஊடக இயக்கம்***

*ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்குவது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தாலும், இலங்கையில் ஊடகவியலாளர் களுக்கு எதிரான ஒரு குற்றத்திற்கு கூட நீதி வழங்கப்படாத வரலாற்றைக் கொண்ட ஒரு நாட்டில் வாழ வேண்டியது குறித்து சுதந்திர ஊடக இயக்கம் கவலை கொண்டுள்ளது.*

*ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்போம் என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த அரசு கடந்த ஆட்சியின் போது பல சம்பவங்கள் குறித்த விசாரணைகளை ஆரம்பித்திருந்தாலும், அவை மந்த கதியிலேயே நகர்கின்றன. நாட்டின் வரலாற்றில், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்காக இரண்டு உயர் நீதிமன்ற வழக்குகள் மட்டுமே பதியப்பட்டுள்ளன. ஒன்று கிடப்பில் போடப்பட்டுள்ள தர்மரத்னம் சிவராம் கொலை தொடர்பான வழக்கு மற்றது பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பான உயர் நீதிமன்ற வழக்கு.*

*பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவத்தில் முக்கிய சந்தேக நபர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் ஆஜராகி, தான் இதற்கு முன் வழங்கிய சாட்சியம் நிர்பந்தத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறியுள்ளதானது, வழக்கில் ஒரு பாதகமான திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதையே தெளிவாகக் காட்டுகிறது.*

*சுதந்திர ஊடக இயக்கம் நடத்திய ஆய்வின்படி, இப்போதிருப்பது ஊடக வியலாளர்களுக்கு எதிராக அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் இடம்பெற்ற காலகட்டத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் ஆகும். இந்த நிலையில் நீதி யான விசாரணைகள் இடம்பெறுமா என்ற கவலையை நீதிக்காக குரல் எழுப் பும் ஊடக சமூகத்தினரிடையே ஏற்படுத்தியுள்ளது. அக்டோபர் 22 ம் தேதி நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 20வது திருத்தம், ஊடகவி யலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாக நடத்தப்படுமா என்ற கேள்வியையும் எழுப்புகிறது.*

*20 வது திருத்தத்தின்படி, இலங்கையின் அனைத்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் காவல்துறை அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் காவல்துறை அதிகாரிகள் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து இதற்கு முன் செய்யப் படாத வகையில் விசாரணைகளை மேற்கொள்வார்களா...?, அத்தகைய நீதிபதி கள் சுயாதீனமாக இருப்பார்களா...? என்ற கேள்விகள் இந்த துறையில் எழுந்து ள்ளன.*

*இந்தப் பின்னணியில்தான், ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்க ளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர் 2 ஆம் தேதி இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகிறது.*

*யார் ஆட்சியில் இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கு வது ஒவ்வொரு அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பது உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இலங்கையில் சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் பிற ஊடக அமைப்புகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்து அனைத்து அரசாங்கங்களுக்கும் அழுத்தம் கொடுக்கிறார்கள். கோரிக்கைகள் விடுக்கின்றார்கள். வரலாற்றில் கல்லெறியப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க முழு அளவிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசாங் கத்தை வலியுறுத்தும் அதேவேளை ஊடக சமூகம் மற்றும் நீதியை மதிக்கும் அனைத்து சமூகங்களும் விசாரணைகளை துரிதப்படுத்த புதிய அரசாங்கம் மீது வலுவான அழுத்தம் கொடுக்குமாறு சுதந்திர ஊடக இயக்கம் வேண்டுகோள் விடுக்கிறது.*

**சீதா ரஞ்சனி**
**தலைவர்**

**லசந்த டி சில்வா**
**செயலாளர்**

ஆசிரியர் தலையங்கம்

# கொரோனா பின்னரான உலக அரசியலில் ஈழத்தமிழரின் இந்துமா கடல்சார் முக்கியத்துவம்

**அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவின் இந்துமா கடல் பாதுகாப்புத் தொடர்பான இலங்கைக்கான விஜயம், அமெரிக்க அரச அதிபர் தேர்தலுக்கான பரப்புரை உச்சக்கட்டத்தில் உள்ள நேரத்திலேயே இடம்பெற்றமை சிறீலங்கா - சீன உறவாடல், உலகப் பிரச்சினையாகத் தலைதூக்கியுள்ளதைத் தெளிவுபடுத்துகின்றது.**

**அமெரிக்காவில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் அரச தலைவராக வந்தாலும், இந்தப் பிரச்சினை அமெரிக்காவின் தேசியப் பிரச்சினையாக முன்னுரிமை பெறும் என்பது இதன் மூலம் உறுதியாகியுள்ளது.**

**அதேவேளை, கடன் பொறிக்குள் சிறீலங்காவைச் சிக்க வைப்பதன் மூலம் சீனா தனது வலுவாண்மையைச் சிறீலங்காவின் இறைமை மீது மேற்கொள்கிறது. இதனைத் தடுக்கும் ஆற்றலை சிறீலங்கா இழந்து நிற்பதால், சீன அதிகாரம் உள்ள நாடாக சிறீலங்கா மாறிவிட்டது என்பது, அமெரிக்காவின் சிறீலங்கா குறித்த தெளிவான விளக்கமாக உள்ளது.**

**இவ்விடத்தில் உலக வல்லாண்மைகளும், பிராந்திய மேலாண்மைகளும் சிறீலங்காவுக்கு ஈழத்தமிழர்களின் கடற்பலத்தை ஒடுக்க உதவியதன் உலக விளைவாகவே இன்று சிறீலங்கா எந்த நாடுகளையும் உலகச் சட்டங்களையும் பொருட்படுத்தாது, சீனாவுடன் ஆசிய நாடுகளுக்கு முன்னுரிமை என்னும் கொள்கை உருவாக்கல் மூலம் சார்ந்துள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.**

**இன்று பாதுகாப்பான கடலாக இந்துமா கடலைப் பேணுவதற்கு சிறீலங்காவும் இந்தோ - பசுபிக் கடற் பாதுகாப்புக்கான அமெரிக்க திட்டங் களில் பங்காளராக வேண்டும் என்பது, அமெரிக்காவின் இன்றைய அழைப்பாக உள்ளது. இந்த அழைப்பைச் சிறீலங்காவை ஏற்க வைப்பதற்கு அமெரிக்கா, தனது சிறீலங்காவுக்கான பங்களிப்பை மேலும் வலுப்படுத்த விரும்புகிறது. இந்த மென்மைப் போக்கு சிறீலங்கா தொடர்ந்தும் அனைத்துலக சட்டங் களுக்கோ அல்லது அனைத்துலக முறைமைகளுக்கோ கட்டுப்படாத அரசாகச் செயற்படுவதற்கான ஊக்கத்தையே சிறீலங்காவுக்கு அளிக்கிறது.**

**அயலகத்துக்கு முதலிடம் என்னும் வெளிவிவகாரக் கொள்கைத் திட்டமிடல் மூலம் இந்தியாவும் கடன்களை வழங்கியும், இராணுவப் பயிற்சிகளை அளித்தும் மென்மையான போக்கில் சிறீலங்காவின் பங்காளி களாகத் தொடர்வதன் மூலமே இந்துமா கடல் மீதான தனது நிலை கொள்ளலை உறுதி செய்ய முயற்சிக்கிறது.**

**ஆயினும் வரலாற்றில் ஈழத்தமிழர்களின் உரிமைகள் பாதுகாப்புற்ற வேளைகளிலேயே, சீன ஆதிக்கத்தை இந்தியாவால் தடுக்க முடிந்தது என்ற உண்மையை இந்தியா உணர வேண்டும். யாழ்ப்பாண அரசின் தோற்றம் என்பது இந்துமா கடல் கடற் பாதுகாப்பைச் சோழர்கள், பாண்டியர்கள் இழந்ததின் பின்னணியில் ஏற்பட்டது என்பதையும், யாழ்ப்பாண அரசை 17 ஆண்டுகள் மட்டும் ஆண்ட சிங்கள சார்பான செண்பகப் பெருமாள் கைப்பற்றிய பொழுதும், தமிழரசனான அழகக்கோனின் கம்பஹா அரசின் வீழ்ச்சியின் பொழுதும், அக்காலத்திலேயே சீனக் கடற்படை இலங்கை கடல் எல்லையில் நிறுத்தப்பட்டிருந்தது என்பதையும் இந்நேரத்தில் இந்தியா எண்ணிப் பார்க்க வேண்டும்.**

**இந்துமா கடலில் சமநிலையின்மையை ஏற்படுத்த உதவுங்கள்; நாங்கள் உங்களுக்கு உதவுகின்றோம் என்ற கோரிக்கைகள் போராட்டக் காலங்களில் முன்வைக்கப்பட்ட நேரங்களிலும், ஈழத்தமிழர்களின் தலைமை உலக அமைதியையும் இந்தியத் துணைக் கண்டத்து அமைதியையும் முன்னிலைப்படுத்தி, தங்களுக்கு நன்மை வரும் என்ற நிலையிலும் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள் என்பது இன்றைய சமகால வரலாறு.**

**இன்று இந்துமா கடலில் அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும், இந்தியாவும் எதிர்பார்க்கும் இந்துமா கடல் அமைதித் திட்டங்கள் நடை முறைக்கு வருவதாக இருந்தால், ஈழத்தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாப்பு வழி அவர்களின் கடலான தென்னிந்திய இந்துமா கடல் மேலான அவர்களின் இறைமையும் அவர்களால் ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுதல் அவசியமாகிறது.**

**அனைத்துலக மன்னிப்புச் சபையின் அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கான கடிதம் இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கான நிலை மாற்றக்கால நீதியையும், மாகாண சபைகளுக்கான அதிகார பரவலாக் கலையும் ஆதாரபூர்வமாக வலியுறுத்தி உள்ளது. இவ்வாறு உலக அமைப்புக்கள் பலவும் நிலைமாற்ற நீதியையும் நிவாரணங்களையும் மனித உரிமைப் பாதுகாப்பையும் நல்லாட்சியையும் ஈழத்தமிழர்களுக்கு வழங்க வேண்டுமென வலியுறுத்தும் இக்காலத்தில், இதற்கான உரையாடல்களை ஈழத்தமிழர்களுடன் ஈழத்திலும் அவர்கள் குடிமக்களாக வாழ்ந்து கொண் டிருக்கும் நாடுகளிலும் உலகநாடுகள் நடாத்தி அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்ப அவர்களின் இருப்பையும் உரிமைகளையும் ஏற்பதே இலங்கை சார்ந்த இந்துமா கடல் அமைதிப்பிர தேசமாகத் தொடர்வதற்கான சிறந்த வழிகளைத் தோற்றுவிக்கும்.**

**இதற்கான அரசியல் உரையாடல்களை முன்னெடுக்கக் கூடிய ஈழத்தமிழர்களின் ஒன்றுபட்ட அரசியல் கட்டமைப்பு ஒன்றை உடன் உருவாக்க வேண்டியது புலம்பெயர் தமிழரின் இன்றைய இலக்காக உள்ளது.**

**ஆசிரியர்**

# ‘தண்டனை விலக்கீட்டை முடிவுறுத்து உண்மையை உயிர்ப்பித்திரு’



*(ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றத் தண்டனை விலக்கீட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினமாகிய நவம்பர் 2ஆம் திகதியையொட்டிய கட்டுரை)*

உண்மைகள் சாவதில்லை. ஆனால் சாகா வரம் பெற்ற உண்மையை வெளிக்கொண்டு வருபவர்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள், கடத்தப்படுகின்றார்கள், கொல்லப்படுகின்றார்கள் நாகரிகம் வளர்ச்சி அடைந்துள்ள போதிலும் வாழ்வியலில் இது மிக மோசமான உலகளாவிய நிலைமையாகத் திகழ்கின்றது.

தகவல்களை - உண்மைத் தகவல்களை அறிந்து கொள்வது மக்களின் பிறப்புரிமை. அந்த உரிமையை நிறைவேற்றுவதற்காக ஊடகவியலாளர்கள்உழைக்கின்றார்கள்.அவர்கள்உண்மைகளையும் உள்ளவாறாக நிலைமைகளையும் வெளிக் கொண்டு வருவதற்குப் பாடுபடுகின்றார்கள். அதனை அவர்கள் தமது வாழ்வியலாக - தொழிலாகக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்களும், அநியாயங்களைச் செய்பவர்களும், அநீதி இழைப்பவர்களும்அவர்களைஆட்டிப்படைக்கின்றார்கள். இதனால் ஊடகவியலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் தமது கடமைகளைச் செய்வதில் இருந்து தடுக்கப்படுகின்றார்கள். அவர்களின் உரிமை – வாழ்வுரிமை இதனால் மறுக்கப்படுகின்றது. இது ஊடக சுதந்திரத்துக்குக் கேடு விளைவிக்கின்றது. கருத்துச் சுதந்திர மறுப்பாகின்றது.

ஊடக சுதந்திரம் என்பது, மிக முக்கிய ஜனநாயக உரிமையாக வரையறுக்கப்பட்டிருக்கின்றது. அது ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்று. ஜனநாயகத்தைத் தாங்கி நிற்பதற்கு நான்கு தூண்களும்அவசியம்.அதில்ஒன்றுபாதிக்கப்பட்டாலும், அல்லது ஒன்றை வீழ்த்தினாலும் ஜனநாயகம் நிலைகுலைந்து விடும். அங்கு சர்வாதிகாரமும், அநீதியும், அட்டூழியங்களும் தலைதூக்குவதற்கு வாய்ப்பாகிவிடும்.

ஜனநாயகம் இல்லாதொழிக்கப்பட்டு, சர்வாதிகாரம் இடம் பிடித்த பல உலக நாடுகளில் இந்த உண்மை பட்டவர்த்தனமாக வெளிப்பட்டிருக்கின்றது.

ஊடகஅடக்குமுறைஎன்பது,இன்றுபெரிய அளவில் பேசப்படுகின்ற ஒரு அனைத்துலகப் பிரச்சினையாகப் பரிணமித்திருக்கின்றது. ஊடக சுதந்திரத்திற்காகவும்,ஊடகஅடக்குமுறைக்குஎதிராகவும் ஊடகவியலாளர்கள், ஊடக அமைப்புக்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஜனநாயகத்தின் பால்பற்றுடையவர்கள்எனபலதரப்பட்டவர்களும் போராடுகின்றார்கள். இந்தப் போராட்டம் காலம் காலமாகத் தொடர்கின்றது.



அதிகாரத்தில் உள்ளவர்களும், ஆட்சியாளர்களும், சக்தி படைத்தவர்களும் ஊடகவியலாளர்களைஎதிரிகளாக நோக்குகின்ற போக்கில் இன்னும் மாற்றம் ஏற்படவில்லை. உண்மைகளை வெளிக் கொண்டு வருகின்ற ஊடகவியலாளர்களை அடக்கிவிட வேண்டும், அழித்துவிட வேண்டும் என்பதே அவர்களுடைய நிலைப்பாடு. இதனால் ஊடகவி யலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் சர்வதேச அளவில் பரந்துபட்ட ஒரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது.

சிறந்த ஊடவியலாளர்கள் வருடந்தோறும் புலிட்சர் என்ற உயர்ந்த விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் ஊடகவியலாளர் ஒருவர் இந்த உயர்ந்த கௌரவத்தைப் பெற்றுக் கொள்கின்றார். ஆனால் வருடந்தோறும் நூறு ஊடகவியலாளர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகின்றார்கள் என்று யுனெஸ்கோ என்ற ஐ.நாவின் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் கூறுகின்றது.




ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை, ஊடகவியலாளர்களுக்கு இடையூறு விளைவித்து, அவர்களைத் தாக்கி அவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களைப் புரிபவர்கள் தண்டனை பெறுவதில் இருந்து தப்பிக் கொள்கின்றார்கள். அவ்வாறு தப்பிக் கொள்பவர்கள் தொடர்ந்து ஊடகத்துறைக்கு அச்சுறுத்தலாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

**பி.மாணிக்கவாசகம்**

இதனையொட்டி ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றத் தண்டனை விலக்கீட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் வருடந்தோறும் நவம்பர் 2 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படுகின்றது.

‘தண்டனை விலக்கீட்டை முடிவுறுத்து’, ‘உண்மையை உயிர்ப்பித்திரு’ என்ற மகுட வாசகங்களை தாரக மந்திரமாகக் கொண்டு இந்தத் தினம் ஒலிக்கின்றது. கடந்த 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையிலான 14 வருடங்களில் செய்திகளை அறிக்கையிட்டு, பொது மக்களுக்குத் தகவல்களை வெளிக் கொண்டு வந்த 1200இற்குக் கிட்டிய எண்ணுக்கணக்கைக் கொண்ட ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இது சரசாரியாக நான்கு நாட்களில் ஒரு கொலை என்ற வீதமாகும்.

ஊடகவியலாளர்களின் பத்தில் ஒன்பது மரணச் சம்பவங்களில் கொலைகாரர்கள் தண்டிக்கப்படாமல்போயிருக்கின்றனர்.இத்தகையதண்டனை விலக்கீட்டு நிலைமையானது, மேலும்மேலும் ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவதற்கு வழி வகுத்திருக்கின்றது. அத்துடன் சட்டம், ஒழுங்கு மற்றும் நீதித்துறை கட்டமைப்புக்கள் சிதைவடைவதற்கும், முரண்பாடுகள் மோசமடைவதற்குமான அறிகுறியாக இது காணப்படுவதாக ஐ.நா சுட்டிக் காட்டி உள்ளது.

இலங்கையிலும் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். தமிழ் ஊடவியலாளர்கள் 35 பேர் வரையில் கொலையுண்டிருக்கின்றனர். ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. யுத்த காலத்தில் மட்டுமல்லாமல், யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னரும்கூட ஊடகவியலாளர்களும், ஊடகத்துறை சார்ந்தவர்களும் தாக்கப்படுவது தொடர்கின்றது.

ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும், ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்படுவதாகவும் ஆட்சியாளர்கள் கூறுகின்றார்கள். ஊடகவியாளர்களை அவர்களுடைய செயற்பாடுகளுக்காகப் பாராட்டுகின்றார்கள். ஆனால் அவர்களுடைய உரிமைகளும், சுதந்திரமும் உரிய முறையில் பேணப்படுவதில்லை. இதனால் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் கொலைகளுக்கு நீதி கோரி போராட்டங்கள்,ஊடகசுதந்திரத்துக்கானசர்வதேச தினத்தன்றும், ஊடகவியாளர்கள் தாக்கப்படும் போதும், அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படும் தருணங்களிலும் நடத்தப்படுகின்றன. இது ஒரு தொடர்கதையாகவே நிகழ்கின்றது.

தண்டனை விலக்கீட்டை ஓர் உரிமையாகவே இலங்கையின் ஆட்சியாளர்கள் பேணி வருகின்றார்கள். அதிகார பலத்தைப் பயன்படுத்தி, அரசியல் சுயநலன்களுக்காக எதனையும் எப்படியும் செய்யலாம் என அவர்கள் செயற்படுகின்றார்கள். மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றி அரசோச்சுகின்ற பேரினஅரசியல்வாதிகள்அனைவருமேதண்டனை விலக்கீட்டு உரிமை சார்ந்து, அரசியல் நலன் களை சுகபோகமாகக் கொண்டிருக்கின்றார்கள். நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் 20 ஆவது அரசியல் திருத்தச் சட்ட நிறைவேற்றத்தின் மூலம் குவிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து ஊடக சுதந்திரம் மேலும் மோசமடையலாம் என்ற அச்ச நிலைமையே காணப்படுகின்றது.

ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு ஆளாவதனால், குற்றச்செயல்கள், ஊழல்கள், மனித உரிமை மீறல்கள் மூடி மறைக்கப்படுகின்றன. ஜனநாயகமும் கேள்விக்கு உள்ளாகின்றது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களில் காணப்படுகின்ற தண்டனை விலக்கீட்டுநிலைமைகளினால் சமூகங்கள் பெரிதும் பாதிக்கப்படுவது குறித்து யுனெஸ்கோ நிறுவனம் கரிசனை கொண்டிருக்கின்றது. சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துவது குறித்து அக்கறையுள்ள அரசுகள், சிவில் சமூகங்கள், ஊடகம் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் தண்டனை விடுபாட்டினை முடிவுறுத்துதற்கான அனைத்துலக முயற்சியில் இணைந்து கொள்ள வேண்டும் என்று அந்த அமைப்பு அழைத்திருக்கின்றது.


நாளுக்கு நாள் வளர்ந்து செல்கின்ற தண்டனை விடுபாட்டு நிலைமையின் தீவிரத்தையும், அதன் விளைவுகளையும் இனம் கண்ட ஐ.நாவின் பொதுச்சபை 2013ஆம் ஆண்டு ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்ற தண்டனை விலக்கீட்டை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நவம்பர் 2ஆம் திகதியை சர்வதேச தினமாகப் பிரகடனப் படுத்தியது.


இரண்டு பிரஞ்சு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட நினைவையொட்டி இந்த நாள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதேவேளை, சர்வதேசஊடகசுதந்திரதினம்மேமாதம்3ஆம்திகதி உலகளாவிய ரீதியில் அனுட்டிக்கப்படுகின்றது.

மனிதாபிமானம் தொடர்பில் எட்டப்பட்டுள்ள இலக்குகளை வலுப்படுத்துவது, உலகளாவிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் ரீதியான விருப்பையும் அதற்கான வளங்களையும் திரட்டுவது, கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெளிவூட்டுவது போன்ற செயற்பாடுகளுக்கு இத்தகைய சர்வதேச தினங்கள் உரிய தருணங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

• • •

# யாழ்.குடாநாட்டு இடப்பெயர்வு என்பது
## ஒரு சம்பவமாக கடந்து செல்லமுடியாத வரலாறு






மியான்மார் என்கிற பௌத்த தேசத்தின் இன அழிப்பில் இருந்து தப்பிப்பதற்காக பல இலட்சம் றொகின்கியோ இன முஸ்லீம் மக்கள் பங்களாதேசத்திற்கு இடம்பெயர்ந்த சம்பவம், இன்று மியான்மார் மீது இனஅழிப்பு மற்றும் போர்க்குற்ற விசாரணை ஒன்றை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் பதிவு செய்யும் வரை சென்றுள்ளது.

சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வரும் போரில் ஏறத்தாள 12 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், இந்த இடப்பெயர்வானது உலகின் கவனத்தை தன்பக்கம் திருப்பியுள்ளது. அங்கு இடம்பெயர்ந்துள்ள மக்களை பராமரிப்பதற்கு 3 பில்லியன் டொலர்களுக்கு மேல் தேவை என்கிறது ஐக்கிய நாடுகள் சபை.

இந்தச் சம்பவங்களின் முக்கியத்துவம் என்பது அந்த நாடுகள் சார்ந்துள்ள பூகோள அரசியல் நலன் சார்ந்ததாகும். 25 ஆண்டுகளுக்கு முன்னர் சிறீலங்கா அரசின் இனப்படுகொலையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஏறத்தாள 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த நாளும் ஒக்டோபர் மாதம் 30 ஆம் நாளாகும்.

ஒக்டோபர் 17ஆம் நாள் சமாதானத்திற்கான போர் என்ற போர்வையில் சிறீலங்கா அரசின் முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா குமாரணதுங்காவினால் மேற்கொள்ளப்பட்ட சூரியக்கதிர் நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமாக எறிகணை வீச்சுக்கள், வான் தாக்குதல்கள் போன்றவற்றில் இருந்து உயிர்தப்பவும், முன்னேறி வரும் சிங்களப் படையினரின் இனப்படுகொலையில் இருந்து தப்பிப்பதற்காகவும் இரவோடு இரவாக தமிழ் மக்கள் கையில் கிடைத்த பொருட்களை எடுத்துக் கொண்டு தென்மராட்சி, வன்னி மற்றும் வடமராட்சி நோக்கி நகர்ந்த சம்பவமானது உலகின் கவனத்தை ஈர்த்திருந்தது.

சூரியக்கதிர் நடவடிக்கைக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இடிமுழக்கம், முன் நோக்கி பாய்தல் போன்ற நடவடிக்கைகளில் பெருமளவான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதும், சூரிய க்கதிர் நடவடிக்கைளில் அதிகளவு மக்கள் கொல் லப்பட்டதும், தமிழ் மக்களை மிகுந்த அச்சத்திற் குள் தள்ளியிருந்தது. எனவே தான் மிகப் பெரும் இனப்படுகொலைகளில் இருந்து தப்பிக்கும் நோக்கத்துடன், இன்று றோகிங்யா மக்கள் பங்களாதேசத்திற்கு இடம் பெயர்ந்தது போல உள்நாட்டுக்குள் தமிழ் மக்கள் பாதுகாப்பு தேடி இடம் பெயர்ந்தனர்.

தமிழ் மக்களின் இந்த இடப்பெயர்வு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் அன்றைய செயலாளர் நாயகம் பூட்ரரஸ் பூட்ரரஸ் காலி அவர்கள்தனது கவலையை தெரிவித்திருந்ததுடன், மனிதாபிமான உதவிகளை வழங்குமாறும் வேண்டுகோள் விடுத்திருந்தார். எனினும் வழமைபோல இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் பொய்யான தகவல்களை தெரிவித்து, ஊடகத் தடைகளை ஏற்படுத்தி தமிழ் மக்களின் இன்னல்களை வெளியுலகிற்கு தெரியாமல் மறைத்து விட்டது சிறீலங்கா அரசு.

**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**

ஐ.நா செயலாளர் நாயகத்தின் கருத்தை தொடர்ந்து பெருமளவான அனைத்துலக ஊடகவியலாளர்கள் கொழும்புக்கு வருகைதந்து, வட பகுதி நோக்கி செல்ல முற்பட்டபோதும், அவர்களை தடுத்த சிறீலங்கா அரசு, மனிதாபிமான தொண்டு நிறுவனங்களுக்கும் தடைகளை விதித்திருந்தது.





இடம்பெயர்ந்த மக்கள் ஒரு இலட்சம் பேரே என அன்றைய வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் அனைத்துலக சமூகத்திற்கு தெரிவித்ததுடன், ஐ.நா செயலாளருக்கும் தனது கண்டனங்களைத் தெரிவித்திருந்தார். அது மட்டுமல்லாது குறைந்தளவான நிவாரணப் பொருட்களையே சிறீலங்கா அரசு இடம்பெயர்ந்த மக்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு அனுப்பியிருந்தது. ஆனால் யாழ். குடாநாட்டு மக்களில் நான்கில் மூன்று பகுதி மக்கள் இடம்பெயர்ந்திருந்ததாக ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான நிறுவனத்தின் பிரதிநிதி பீற்றர் மெஜீர் தெரிவித்திருந்தார்.

அன்று சிறீலங்கா அரசின் பொய்களை நம்பியது போல பாவனை செய்த அனைத்துலக சமூகத்தின் நடவடிக்கைகள் தான் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் போதும் தொடர்ந்திருந்தது. சிறீலங்கா அரசின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கியிருந்ததுடன், ஒரு இனஅழிப்புக்கும் அவர்கள் துணைபோயிருந்தது முள்ளிவாய்க்காலில் மட்டும் தான் இடம்பெற்றது அல்ல, 1995 ஆம் ஆண்டும் அனைத்துலக சமூகம் தனது கண்களை இறுக மூடியே இருந்தது.



2000ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டை கைப்பற்ற விடுதலைப்புலிகள் முனைந்தபோது அங்கு சிக்கியிருந்த 40,000 படையினரை காப்பாற்ற இந்தியாவும், பாகிஸ்தானும் போட்டிபோட்டு களமிறங்கியது போல 5 இலட்சம் மக்களை காப்பாற்றவோ அல்லது மனிதாபிமான உதவிகளை வழங்கவோ எந்த நாடும் முன்வரவில்லை.

சிறீலங்கா படையினரின் தாக்குதல்களினால் காயப்பட்டும், இடப்பெயர்வினால் ஏற்பட்டசுகாதாரமற்றவாழ்க்கைமுறைகளினால் நோய்களின் தாக்கத்திற்கு உட்பட்டும் பெருமளவான மக்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்ட போதும், அவர்களை பராமரிப்பதற்கு போதிய மருத்துவ வசதிகளும் இருக்கவில்லை.

இடம்பெயர்ந்த மக்களில் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள்கடுமையானமழை நேரத்திலும் தங்குமிடமின்றி வெளியான இடங்களில் துன்பங்களுக்கு மத்தியில் தங்கியிருந்ததாக அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜெராட் பெய்றிநெட் தெரிவித்திருந்தார்.

எனினும் சிறீலங்கா அரசின் கடுமையான அடக்குமுறைகளுக்கு அஞ்சிய ஊடகவியலாளர்கள் மக்கள் பட்ட அவலத்தைக் கூட புகைப்படங்களாக பதிவுசெய்ய தவறியிருந்தனர். அங்கு என்ன இடம்பெறுகின்றது என்பதை அனைத்துலகம் அறிவதை சிறீலங்கா அரசு தனது முழுமையான வளங்களையும் பயன்படுத்தி தடுத்திருந்ததாக தான் உணருவதாக மேற்குலக தொண்டு நிறுவன அதிகாரி ஒருவர் நவம்பர் 5 ஆம் நாள் வெளிவந்த ‘த ரொரொன்டோ ஸ்ரார்’ என்ற பத்திரிகைக்கு தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான தமிழீழ விடுதலைப் போர் என்பது பல பரிணாமங்களினூடாக பயணித்து வருகின்றது. அதில் மக்களும் விடுதலைப்புலிகளும் இணைந்து பயணித்து வந்திருந்ததே வரலாறு. எனவே தான் குடிக்க நீரோ, உணவோ இன்றி பல மைல்கள் நடந்து நாவற்குழிப் பாலத்தை கடந்த ஒவ்வொரு மக்களின் கால்களும் எமது போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் பங்களிப்பை வழங்கியிருந்ததாக விடுதலைப்புலிகளின் மூத்த கவிஞர் புதுவை இரத்தினதுரை அன்று தெரிவித்திருந்த கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது.



எமது விடுதலைப் போரில் மக்களும், போராளிகளும் கொடுத்த விலை என்பது மகத்தானது என்பதுடன், மக்கள் அனுபவித்த துன்பங்களும் அதிகமானவை. அது பல வரலாறுகளை சுமந்தே செல்கின்றது. அந்த வரலாற்றில் யாழ். குடாநாட்டு இடப்பெயர்வு என்பதும் முக்கியமானது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# பொம்பியோ தொடுத்த தாக்குதல்
# சீனாவின் பக்கத்திலா இலங்கை?

**அகிலன்**

கொழும்பு அரசியல் கடந்த வாரம் இராஜதந்திரக் காய் நகர்த்தல்கள் நிறைந்த ஒரு வாரமாகவே இருந்துள்ளது. அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவின் கொழும்பு வருகை, இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பால்கே சம்பந்தனுடன் நடத்திய பேச்சு, சீனாவின் புதிய தூதுவர் இலங்கை வருகை என இராஜதந்திர அரசியல் சூடுபிடித்திருந்தது. 20 ஆவது திருத்தத்தின் மூலம் அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி தன்வசம் எடுத்திருக்கும் பின்னணியில், இந்த அரசியல் நகர்வுகள் இடம்பெற்றிருக்கின்றன.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கைக்கான விஜயம் எதிர்பார்க்கப்பட்டது போலவே சர்ச்சைக்குரிய ஒன்றாக முடிந்திருக்கின்றது. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒரு போட்டிக் களமாக இலங்கை அமைந்திருக்கிறது என்பதை இந்த விஜயம் மீண்டுமொருமுறை தெளிவாக உணர்த்தி இருக்கின்றது. அமெரிக்க இராஜாங்கச் செயலாளரும் தெளிவான சில செய்திகளைச் சொல்லிச் சென்றிருக்கின்றார்.

பொம்பியோவின் இலங்கைக்கான விஜயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே கடுமையான அறிக்கை ஒன்றை சீனா வெளியிட்டிருந்தது. "இலங்கை மக்களை பொம்பியோ குழப்பக் கூடாது" என்ற அர்த்தத்தில் சீனாவின் அந்த அறிவிப்பு ஒரு எச்சரிக்கைப் பாணியில் வெளிவந்திருந்தது. பொம்பியோ தன்னுடைய விஜயத்தின் போது இலங்கை மக்களைக் குழப்பக்கூடிய வகையில் சீனா குறித்து கருத்து வெளியிடுவார் என்பதை சீனா சரியாகவே கணித்திருந்தது. பொம்பியோவின் கொழும்பு வருகை இலங்கையில் தன்னுடைய இருப்பை எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் சீனா மிகவும் அவதானமாகவே இருந்திருக்கின்றது.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுடன் கூட்டாக ஊடக மாநாட்டை நடத்திய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர், சீனா மீது தாக்குதலைத் தொடுப்பதற்கு அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். "இலங்கையை, சீனா சூறையாடுகின்றது" என்ற அர்த்தத்திலான அவரது கருத்து நிச்சயமாக இராஜதந்திர வட்டாரங்களை அதிர வைத் திருக்கின்றது. இது சீனாவுக்குக் கடும் அதிருப்தியையும் – சீற்றத்தையும் கொடுத்தது.

"நாங்கள் நண்பர்களாக வருகின்றோம், சகாக்களாக வருகின்றோம். ஆனால் சீனாவோ, இலங்கையின் இறையாண்மையை மோசமாக மீறும் வகையில் மோசமான உடன்படிக்கைகளையும், சட்ட மீறல்களையும் கொண்டு வந்திருக்கின்றது. இலங்கையின் நிலம் மற்றும் கடல் சார்ந்த பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுவதை நாங்கள் பார்க்கின்றோம். சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி பிறரை சூறையாடும் தன்மை கொண்டது" என பொம்பியோ கடும் வார்த்தைகளைப் பயன்படுத்தி சீனா மீதான தாக்குதலை நடத்தினார்.



இலங்கையில் வைத்து, இலங்கைக்குப் பெருமளவு பொருளாதார கட்டுமான உதவிகளைச் செய்து வரும் சீனா மீது இவ்வாறான தாக்குதல் ஒன்றை அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் நடத்துவார் என்பது எதிர்பார்க்காத ஒன்றுதான். இலங்கை அரசுக்கு இது பெரும் சங்கடமான ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கும். ஆனால், இதன் மூலம் சொல்லப்பட்ட செய்தி முக்கியமானது.

சீனாவோ இவ்வாறான தாக்குதல் ஒன்றை எதிர் பார்த்திருந்தது போல, சில நொடிகளிலேயே அதற்குக் கடுமையான பதிலடி ஒன்றைக் கொடுத்தது. கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தால் வெளியிடப்பட்ட ருவிட்டர் குறிப்பில், "மன்னிக்கவும். இராஜாங்க அமைச்சர் பொம்பியோ. நாம் இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான நட்புறவையும், ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதில் பிஸியாக இருக்கின்றோம். உங்களது ஏலியன் எதிர் பிறிடேட்டர் விளையாட்டுக்கான அழைப்பில் எமக்கு அக்கறையில்லை. என்றும் போல அமெரிக்கா இரட்டைப் பாத்திரத்தை ஒரே நேரத்திலேயே விளையாட முடியும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒருவகையில் நையாண்டித் தனமான ஒரு குறிப்பைத்தான் சீனா தனது பிரதிபலிப்பாக வெளியிட்டது.

பொம்பியோவுடன் இணைந்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, தாம் வெளிவிவகாரங்களில் நடுநிலைக் கொள்கையை கடைப்பிடிப்பதாகவும், அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளுடனும் ஒத்துழைப்புடன் செயற்படுவதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார். இலங்கை வழமையாக அவ்வாறுதான் கூறுகின்றது.

"விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் முடிவின் பின்னர் சீனா இலங்கையின் அபிவிருத்திக்கு உதவியது" என்பதை பொம்பியோவுடனான பேச்சின் போது, சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதன் காரணமாக இலங்கை சீனாவின் கடன் பொறியில் சிக்கவில்லை எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். "இலங்கைக்கும், வெளிநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பல விடயங்களால் தீர்மானிக்கப் படுகின்றன கலாச்சார மற்றும் வரலாற்றுக் காரணிகள், அபிவிருத்தி ஒத்துழைப்பு ஆகியனவே சில முன்னுரிமைக்குரிய விடயங்கள் என தெரிவித்துள்ள ஜனாதிபதி, வெளிநாட்டு உறவுகளை பேணுவதற்காக எந்த சூழ்நிலை உருவானா லும் இலங்கையின் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றை விட்டுக் கொடுப்பதற்கு தயாரில்லை" எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



சீனா தொடர்பில் பொம்பியோ அதிரடியாகத் தெரிவித்த கருத்துக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பதிலாகவே ஜனாதிபதியினதும், வெளிவிவகார அமைச்சரினதும் கருத்துக்கள் உள்ளன. அமெரிக்காவை இந்தக் கருத்துக்கள் திருப்திப்படுத்தும் என்பது எதிர்பார்க்கக் கூடியதல்ல. சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதை தம்மால் ஏற்க முடியாது என்பதை இலங்கை மண்ணில் வைத்தே அமெரிக்கா இந்தளவுக்கு கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் வெளிப்படுத்தியிருப்பது இலங்கைக்கு மறைமுகமாக விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை தான்.

இலங்கையுடன் இரண்டு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது. ஒன்று SOFA மற்றது எம்.சி.சி. இந்த இரண்டு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடப் பண்ணுவதற்கான அழுத்தத்தைத் தான் அமெரிக்கா கொடுத்தது என ஜே.வி.பி. போன்ற அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன. ஆனால், "அமெரிக்காவினால் முன்மொழியப்பட்டுள்ள எம்.சி.சி. உடன்படிக்கையில் கனவில் கூட இலங்கை கைச்சாத்திடாது" என ஜனாதிபதி கோட்டாபய சிங்கள வாரப் பத்திரிகை ஒன்றுக்கு உறுதியாகக் கூறியிருக்கின்றார்.



இலங்கையைப் பொறுத்தவரையில், சீனாவின் முதலீடுகள் அதற்கு முக்கியம். பொருளாதாரம் மோசமான நிலையில் இருப்பதால், சீனாவின் கடன் உதவிகளும் அதற்குத் தேவை. பலமான பொருளாதாரத்தைக் கொண்டதாக சீனா இருப்பதால், அதற்கான வாய்ப்புக்களும் அதற்கு அதிகம். இலங்கை என்னதான் அணிசேராக் கொள்கை என்று சொல்லிக் கொண்டாலும், சீனாவுடனான உறவு அதற்கு முக்கியம். அதனால், அந்த உறவை இலங்கை தொடரத்தான் போகின்றது.

இந்தியாவின் ஆதரவுடன் சீனாவுக்கு எதிரான வார்த்தைப் போரை கொழும்பில் ஆரம்பித்த அமெரிக்கா, இலங்கையைப் பணிய வைப்பதற்கு வைத்திருக்கும் உபாயங்கள் என்ன? இன்னும் இரண்டு நாட்களில் நடைபெறப்போகும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அதனை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்!

• • •



# கொரோனாவிலிருந்து இலங்கை தப்புமா?

## தவறான முகாமைத்துவம் பெரும் அழிவை ஏற்படுத்தும்



சமுதாய மருத்துவ நிபுணர் **முரளி வல்லிபுரநாதன்**

**இலங்கையில் மூன்றாவது அலையாக கோவிட்-19 தொற்று தற்போது அசுர வேகத்தில்பரவிவருகிறது. 24 மாவட்டங்களில்தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள். இது பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அனர்த்தத்தில் இருந்து நாடு மீண்டு வருமா என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது.**

**இது தொடர்பாக இலங்கையின் சுகாதார அமைச்சின் சமுதாய மருத்துவ நிபுணர் வைத்தியர் முரளி வல்லிபுரநாதனுடன் 'இலக்கு' மேற்கொண்ட நேர்காணலில் அவர் கூறிய கருத்துக்களை இங்கே பகிர்கின்றோம்.**

2019ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இந்த கோவிட்-19 தொற்று உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது. இந் நோயானது அனைத்து நாடுகளிலும் பல இழப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த வருட இறுதி அல்லது அடுத்த வருட ஆரம்பப் பகுதியில் இந்தத் தொற்று நோய்க்கான தடுப்பு மருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையூட்டக்கூடிய அளவில் ஆய்வுகள் முன்னேற்றம் கண்டுள்ளன. அதுவரை நாமே எம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் தற்போது 10 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், 20 பேர் வரையில் உயிரிழந்துள்ளார்கள். முதன்முறையாக இலங்கையில் தொற்று ஏற்பட்ட போது, மக்கள் அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளித்தார்கள். பொதுவாக ஏற்று கடைப்பித்தார்கள். இதனால் நோய்த் தொற்றை கட்டுப்படுத்தி வைத்திருந்தோம். கோவிட்-19 தொற்றை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்த நாடாக இலங்கை இருந்தது.

ஆனால் தற்போது மீண்டும் ஏற்பட்டுள்ள இந்த வைரஸ் பரவல் கட்டுக்கடங்காமல் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. மக்கள் காலப் போக்கில் சட்ட திட்டங்களை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்ற நிலை காணப்படுகிறது. இது பாரிய அழிவை நோக்கிச் செல்கிறது. முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை பேணுவது, கைகளை சுத்தம் செய்வது போன்ற அடிப்படையான செயற்பாடுகளைக்கூட கடைப் பிடிக்காத நிலையில் மக்கள் உள்ளார்கள்.

இதனால் முகக்கவசம் அணியாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றமாக தற்போது மாற்றப்பட்டுள்ளது. இருப்பினும் எவ்வாறான முகக்கவசங்களை அணிய வேண்டும் என்பதில் பலருக்கு தெளிவில்லை

### எவ்வகையான முகக்கவசங்களை அணியலாம்

பொதுமக்கள் ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் முகக்கவசங்களை அணியலாம்.




மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களுக்கு செல்வோர், தனிமைப்படுத்தப்பட்டவர்கள், மருத்துவ சிகிச்சை முகக்கவசம் (medical surgical masks) அணியலாம்; அல்லது N95 / MN95 முகக் கவசங்களை அணிந்து கொள்ள முடியும். முகக் கவசங்கள் அணிய முதல் கைகளை சுத்தம் செய்தல் வேண்டும்.




கடதாசி, துணிகளினால் செய்யப்பட்ட முகக்கவசங்கள் அணிவதன்மூலம் பொலிசாரிடம் இருந்து தப்பித்துக் கொள்ளலாமே தவிர, நோய்க்




கிருமிகளின் பாதிப்பில் இருந்து தப்ப முடியாது. மேலும் சிலர் கறுப்பு நிற முகக்கவசம் அணிகிறர்கள். அது மிகவும் ஆபத்தானது. அழுக்குகள் படியாத முகக்கவசங்கள் அணிய வேண்டும். தொடர்ந்து அழுக்குகள் படியும் முகக்கவசங்களை அணிந்தால், கிருமி தொற்று ஏற்படவாய்ப்புள்ளது.

### சமூக இடைவெளியை பேணுதல்

சமூக இடைவெளியை பேணுவது என்பது சில சந்தர்ப்பத்தில் முடியாதிருக்கும். அதாவது பொதுப் போக்குவரத்துப் பயணத்தில் சரியாக அதை கடைப்பிடிக்க முடியாதிருக்கும்.

மேலும் ஒன்றுகூடல்கள், திருவிழாக்கள், மரணச் சடங்குகள், திருமணம் என பலவிதமான நிகழ்வுகள் நடைபெறுகிறது. அங்கு கலந்துகொள்பவர்கள் ஆலோசனைகளை பின்பற்றத் தவறும் பட்சத்தில் நோய் பரவுகிறது.

### கை கழுவுதல் / தமிழர் கலாசாரத்தை பின்பற்றலாம்

கைகளை கழுவுதல் என்பது வீடுகளில், வேலைத்தளங்களில் உள் செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டும். தமிழர் கலாசாரத்தில் அந்த நடைமுறைகள் உள்ளது. மீண்டும் எமது தமிழ்ச் சமூக பழக்கவழக்கங்களை பின்பற்றினால், நோய்த்தொற்றை கட்டுப்படுத்தலாம். மேலும் நோய்வாய்ப்படக் கூடிய தன்மை உள்ளவர்கள் வெளியில் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். முறையான வழிகாட்டல்களை பின்பற்றுவதால் நோய் பரவும் வீதத்தை கட்டுப்படுத்தலாம்.

இறப்பு வீதம் ஏனைய நாடுகளை விட குறைந்த அளவில் உள்ளது. அதைத் தொடர்ந்து பேண மக்கள் ஒத்துழைக்க வேண்டும். விழிப்புணர்வு நிலையை பேண வேண்டும். அப்போது தான் பாதிப்பை தவிர்த்துக் கொள்ள முடியும்.

### உள ரீதியாக பாதிக்கப்படும் நோயாளர்கள்

நோயளர்களை குற்றவாளிகள் போல பார்கிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். உளவியல் ரீதியான பாதிப்புக்கள் அதிகம் ஏற்ப ட்டுள்ளது. உளவியல் பாதிப்பு ஏற்படும் என்பதை உணராமல் செய்திகளை வெளியிடுகி றார்கள். பொறுப்பற்ற செய்தி வெளியிடுவதால் பலர் பாதிக்கப் படுகிறார்கள்.

### நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் முறையற்ற முகாமைத்துவம்

கோவிட்-19 தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு வழங்கப்படும் அறிவித்தல்கள் தனிச் சிங்கள மொழியில் மட்டும் வழங்கப்படுகிறது. இது ஏனைய மொழி பேசும் மக்களுக்கு சென்றடைவதில் தாமதம் ஏற்படுகிறது. இதில் மாற்றம் கொண்டுவரப்பட்டு, தமிழ் மொழியிலும் அறிவித்தல்கள் உடனுக்குடன் வழங்கப்பட வேண்டும்.

சமூகப் பரவல் ஏற்பட்டால், அதை கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் எவையும் இதுவரை இல்லை. மிக முக்கியமாக வைத்தியசாலைகளில் ICU விடுதிகள் அதிகரிக்கப்படவில்லை. எனவே அதிகளவு தொற்று ஏற்படும் இடத்து மக்களுக்கு சிகிச்சை வழங்க முடியாமல் போகும். இந்தச் சந்தர்ப்பத்தில் உயிரிழப்புகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மேலும் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றை உதாரணமாக பார்க்கும்போது. மேல் மாகாணத்தில் 3 நாட்கள் தொடர் தனிமைப் படுத்தல் ஊரடங்குச் சட்டம் போடப்படும் என முழுமுட்டாள் தனமாக முன்னரே அறிவிக்கப் பட்டது. இதனால் அங்கிருந்து பலர் ஏனைய மாவட்டங்களுக்குச் சென்றுள்ளார்கள். அவர்களில் நாளுக்கு நாள் தொற்றாளர்களும் அடையாளப் படுத்தப்பட்டு வருகிறர்கள். இப்போது மேல் மாகாணத்தில் இருந்து சென்றவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவோம் என கூறியுள்ளார்கள். இது எந்தவ கையில் நியாயம்?

இதே போன்ற சட்ட விரோத அறிவிப்புகள் மற்றும் தவறான கோவிட் முகாமைத்துவம் கோவிட் கட்டுப்பாடு என்ற பெயரில் தொடர்ந்து இடம் பெறப்போகும் அராஜகமான காட்டு தர்பார் நிர்வாகத்துக்கு கட்டியம் கூறுகிறது.

உலகெங்கும் கோவிட் அலை ஏற்படும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# எமது தாயகப் பகுதிகளை பாதுகாக்கும்

# இறுதிக் கட்டத்தில் நாம் இருக்கின்றோம்

கிழக்கு மாகாணத்தின் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நாங்கள் சுட்டிக்காட்டினாலும், பல பிரச்சினைகள் தொடர்ச்சியாக முளைவிடும் நிலையிலேயே இருந்து வருகின்றன.

குறிப்பாக கிழக்கில் காணி அபகரிப்பு, தொல்பொருள் திணைக்களப் பிரச்சினையென பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள நிலையில், தமிழர் களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமே உள்ளது.

கிழக்கில் தமிழ் மக்களுக்கு எழும் பிரச்சினைகளை நாங்கள் பேசிவிட்டு கடந்து செல்லும் நிலையே தொடர்ச்சியாக இருந்து வருகின்றதே தவிர, அதற்கான எவ்வாறான தீர்வினை வழங்கலாம் என்பதை கண்டுபிடித்து வழங்குவதற்கு நாம் தவறுகின்றோம்.

குறிப்பாக வடகிழக்கில் தமிழர்களின் தாயகப் பகுதிகள் அபகரிக்கப்படுவதாக நாங்கள் பல காலமாக குரல் எழுப்பி வருகின்றோம். ஆனால் எமதுதாயகப்பகுதிகளைபாதுகாப்பதற்குநாங்கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என்பதையும் ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

இன்று புலம்பெயர்ந்துள்ள மக்கள், வடகிழக்கு தமிழர் தாயகப்பகுதி சிங்களவர்களினால் அபகரிக்கப்படுகின்றது, வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர். இக்குற்றச்சாட்டினை யாரும் மறுதலிக்க முடியாது. ஆனால் அக் குற்றச்சாட்டுகளை சுமத்துபவர்கள் அவற்றினை தடுப்பதற்கு மேற் கொண்ட செயற்பாடுகள் என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டியது பாரிய கடமையாகும்.

இன்று கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகள் பறிக்கப்படுவதற்கு வெறுமனே பேரினவாதத்தினை மட்டும் குற்றஞ்சாட்ட முடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம். இதனை யாரும் ஏற்றுக் கொண்டாலும்சரி, ஏற்றுக்கொள்ளா விட்டாலும் சரி இதுதான் உண்மை.

தமிழர்களின் விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழர்களினால் பாதுகாக்கப்பட்ட காணிகள், இன்று சிங்களவர்களினால் மிகவும் இலகுவாக பிடிக்கப்பட்டு, அங்கு சிங்கள குடியேற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. யுத்ததிற்கு முன்பாக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் செறிவாக இருந்த தமிழர்கள், இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் செறிவாக



வாழும் நிலையுள்ளது.

குறிப்பாக, தமிழர்கள் வாழும் நிலங்கள் வளம் மிக்கதாக காணப்பட்டதன் காரணமாக, அவைதிட்டமிடப்பட்ட முறையில்ஆக்கிரமிக்கப்பட்டன. இந்த ஆக்கிரமிப்புக்கள் என்பது விவசாய செய்கை, தோட்டச் செய்கை, சேனைப் பயிர்ச் செய்கை என்ற அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மகாவலி அபிவிருத்தி, மதுறு ஓயா அபிவிருத்தி என்ற போர்வையில் இந்த குடியேற்றங்கள் செய்யப்பட்டன. இந்த குடியேற்றங்கள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டாலும், தமிழர்களின் சரியான நகர்வுகள் முன்னெடுக்கப்படாமை மற்றும் அசண்டையீனம், அக்கறையின்மை போன்றவையும் இதற்கு காரணமாக கொள்ள முடியும். கடந்த காலத்தில்



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகள் பாதுகாக்கப்படவேண்டும்; அங்குள்ளகாணிகளை பயன்படுத்துவதற்கு முன்வர வேண்டும்; புலம் பெயர்ந்துள்ள மக்கள் எல்லைப் பகுதிகளில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும், அவ்வாறான எந்த நடவடிக்கைகளும் இதுவரையில்

**வா. கிருஸ்ணா**

நடைபெற்றதை காண முடியவில்லை. அதற்கு அக்கறை செலுத்தும் நிலைமை உருவாகக் கூடவில்லையென்பதே கவலைக்குரிய விடயமாகும்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மைலந்தனை, மயிலத்தமடு ஆகிய பகுதிகளில் சிங்களவர்களினால் காணி அபகரிப்புகள் முன்னெடுக்கப்பட்டமை இதற்கு சிறந்த உதாரணங்களாகும். 2010ஆம் ஆண்டு தொடக்கம் சிங்களவர்களின் அத்துமீறல்கள் இப்பகுதியில் இருந்தபோதிலும், இங்குள்ள காணிகளை பாதுகாப்பதற்கு யாரும் முன்வரவில்லை.

குறிப்பாக குறித்த பகுதி வளமான பகுதியாகும். அது மேய்ச்சல் தரைக்கு காலங்காலமாக பயன்படுத்தப்பட்டபோதிலும், அவற்றிற்கான உரிமமோ அதற்கான அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களோ இல்லை. குறித்த பகுதியில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மாடுகள் மேய்க்கப்படுகின்றன. ஆனால் அங்கு பால் பதனிடும் தொழிற்சாலை அமைத்து, அங்கு பெறப்படும் பாலை மூலப்பொருளாக கொண்டு உற்பத்திகளை மேற் கொள்வதற்கான ஏது நிலைகள் உள்ள போதிலும் அதனை மேற்கொள்வதற்கு யாரும் முன் வரவில்லை.

அல்லது அங்குள்ள காணிகளைப் பெற்று கால்நடை வளர்ப்புடன், உப பயிர்ச் செய்கை அல்லது வேறு உற்பத்திகளை செய்வதற்கான வாய்ப்புகள் உள்ள போதிலும், அவற்றினை முன்னெடுப்பதற்கான முயற்சியை யாரும் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக அருகில் உள்ள சிங்களவர்களை அரசாங்கம் பயன்படுத்தி, அங்கு உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இது திட்டமிடப்பட்ட வகையில் கிழக்கு மாகாண ஆளுநரினால் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த முன்னெடுப்புகளை எதிர் காலத்தில் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகள் அவசியமாக தேவைப்படுகின்றன.

இதே போன்றுதான் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகள் காணப்படுகின்றன. இன்று போரதீவுப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காடுகள் சார்ந்த பகுதிகள் அபகரிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் பல பகுதிகள் அபகரிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறுதான் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழர்கள் வாழும் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், எல்லைப் பகுதிகளை சிங்கள மக்கள் ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கான ஏற்பாடுகள் அரசுகளினால் மிகவும் சூட்சுமமான முறையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமது கால்நடைகளை தமது பகுதிக்குள் வளர்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணம் எமது நிலங்களை நாங்கள் பாதுகாக்கத் தவறியதேயாகும். எல்லைப் பகுதியில் உள்ள காணிகளை குறைந்தது நீண்டகால குத்தகை அடிப்படையிலாவது கொள்வனவு செய்து, அவற்றினை விவசாய செய்கைகளுக்கு பயன்படுத்தப் படும்போது, அந்த காணிகளை பாதுகாக்க முடியும்.



இன்று கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் பெரும்பாலான தமிழர்கள் அங்கு இல்லை. அம்பாறை நகரில் இருந்த தமிழர்களும் தற்போது அங்கு இல்லை. எல்லைப் பகுதிகள் முற்றாக பறிபோய் விட்டன. அதன் காரணமாகவே அந்த மாவட்டங்களில் தமிழர்கள் இரண்டாம் தர பிரஜைகளாகும் நிலையேற்பட்டுள்ளது.

இன்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சிங்கள-முஸ்லிம் இனத்தவர்களால் தமிழர்களின் வளங்கள் பெருமளவில் சுரண்டப்பட்டு விட்டன. அந்த வளங்கள் சுரண்டப்பட்டு செல்வதற்கு எமது சரியான திட்டமிடல் இல்லாமையும் காரணமாக அமைந்திருக்கின்றது. அம்பாறை மாவட்டத்தில் இன்று அக்கரைப்பற்று தொடக்கம் பொத்துவில் வரையான பகுதியிலேயே தமிழர் களின் காணி வளம் ஒரளவு இருக்கின்றது. அவற்றினையும் நாங்கள் சரியான திட்டமிடல் மூலம் பாதுகாக்க தவறுவோமானால் அதனை யும் இழக்கும் நிலையேற்படும்.

இதேபோன்ற நிலைமைதான் இன்று திருகோணமலை மாவட்டத்திலும் இருக்கின்றது. அங்கு வரலாற்று சிறப்புமிக்க பகுதிகளும், இன்று சிங்கள மயப்படுத்தப்பட்டு வருகின்றன. நாங்கள் இவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்த கடந்த காலங்களில் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்காத காரணத்தினால், இன்று திரு கோணமலை மாவட்டம் முழுமையாக சிங்களவர்களின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.

அம்பாறை - திருகோணமலை மாவட்டங்க

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தமிழர் தொல்குடி வரலாற்றுத் தேடல் – நேற்றும் – இன்றும்

**தமிழர் தொல்குடித் தேடலை ஊக்குவித்த உளவியற் காரணிகள்:**

பகுதி 02

*1950, 60, 70களில் எமது தாயக நிலங்களில் தமிழர் தொல்குடி வரலாறு பற்றிய தெளிவான தரவுகளையோ, தகவல்களையோயாம் எமது இளமைக் காலங்களிற் பெறுவதற்கான வாய்ப்புகள், வசதிகள், சூழல்கள் பெரிதாக இருந்ததில்லையென்றே கூற வேண்டும்!*

*இலங்கைத் தீவினைப் பொறுத்தவரையில், தமிழர் தேச, தேசியச் சிந்தனைகள் யாவும் முற்று முழுதாக சிங்களப் பேரினவாதத்தினின்றும் எம்மை விடுவிக்கும் இலக்கோடும், நோக்கோடும் கருத்தரிப்புற்றுக் கட்டியெழுப்பப்பட்டு அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒருகாலத்திலேயே எனது இளமைக்காலம்தாயகத்தில்வடிவமைக்கப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு வந்தது! இலங்கைத்தீவில் வாழ்கின்ற தமிழர்களின் இறைமையையும், இருப்பையும் தக்கவைக்கின்ற ஒரு தேச, தேசியம் சார்ந்த அரசியல் இயக்கமே எமது இரத்த ஓட்டத்தில், எண்ண அலைகளில், இருதயத்துடிப்பில் கலந்து வியாபித்து நின்றதனை நமது சமகாலத்தில் வாழ்ந்த மாணவ உலகம் ஒருபோதும் மறுக்காதென உறுதியாக நம்புகின்றேன்!*

*எனக்கு ஏழு வயதாக இருந்தபோது, 1956 இன் தனிச்சிங்கள மசோதாவின் மூலம் எம்மீது திணிக்கப்பட்ட சிங்கள மொழித்திணிப்பும் சரி, அதனைத் தொடர்ந்து 1958இல் நிகழ்ந்து பல தமிழ் மக்களின் உயிர்களை மிகமிகக் கொடூரமான முறையிற் காவுகொண்ட இனவெறிப் படுகொலைகளும் சரி, எமது பிஞ்சு இதயங்களில் ஒரு சிங்களப் பௌத்த அரச பயங்கர வாதத்திற்கெதிரான தேச, தேசிய உணர்வியக்கத்தியக்கத்திற்கான உளவியலுக்குள் இழுத்துச் சென்றதனால், ஒரு கசப்பு நிலை கடந்த துன்ப வடுக்கள் தொடாத சம நிலைப்பட்ட அறிவியற் பார்வையுள்ள ஒரு தமிழர் தொல்லியல் வரலாற்றுத் தேடலை எம்மால் எமது பள்ளிக்காலங்களிலோ அல்லேல் கல்லூரிக் காலங்களிலோ எதிர்கொள்ள முடியவில்லை!*

*1956இனைத் தொடர்ந்து தொடர்ச்சியாகத் தமிழர்களாகிய யாம் இலங்கைத்தீவில் அனுபவித்து வந்த அரச ரீதியான, அரிசியல் ரீதியான, இன, மத, மொழி, கல்வி, பொருளாதார ரீதியான புறக்கணிப்புகள், புறந்தள்ளல்கள், அவமானங்கள், அவதூறுகள், அலட்சியங்கள், அச்சுறுத்தல்கள், அங்கலாய்ப்புகள், எச்சரிக்கைகள், ஏய்ப்புகள், ஏமாற்றங்கள் என இவையனைத்தும் எமக்கான ஒரு பாதுகாப்புள்ள தேச தேசிய உருவாக்கத்தை நோக்கிய ஒரு தேடற் பயணத்திலேயே எம்மை ஈர்த்தும், ஈடுபடுத்தியும் வந்ததெனலாம்!*

*இவ்வாறான ஓர் அரசியற் பின்னணியில் எம்மை எமது தேசம் தேசியம் பற்றிய விழிப்புணர்வுக்கு உட்படுத்திய அரசியற் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் ஒருசிலர் இருந்ததன் விளைவாக யாம் தமிழையும், தமிழரையும் ஓர் உரிமைப் போராட்டக் கோணத்திலேயே எமக்குள் ஏந்தியவாறு எமது வாழ்க்கைப் பயணத்தின் ஆரம்பப் படிகளில் ஏறி வந்தோம்!*

*இரத்தத் திலகமிட்டு வரவேற்று உணர்வுபூர்வமான ஒரு சனநாயக நெறிப்பட்ட தேச,தேசிய அரசியற்கலாச்சாரமேஎம்மைஅன்றையகாலத்தின் தேவை நோக்கி வழிநடத்தியதன் விளைவாக ஓர் ஆழமான தொல்லியல் வரலாற்றுத் தேடலையாம் நாடவில்லையென்றே கருத முடியும்!*

*இந்நிலையில், இலங்கையிற் தமிழர்களின் தோற்றம் பற்றியோ, அவர்களது வரலாற்று பண்பாட்டு வாழ்வியற் தடயங்கள் பற்றியோ எமக்குத் தெளிவுபடுத்துவதற்குக்கூட யாரும் முன் வந்ததாகக் கூறுவதற்கில்லை!*

*உண்மையில் எமது முழுமையான தாயகப் பிரதேசங்களையும் அவற்றின் கிராமங்கள், ஊர்கள், சிற்றூர்கள் பற்றியும் எமது தமிழர் தேச விடுதலைப் போராட்ட காலங்களுக்கு முன்னர் நாம் கொஞ்சமாவது அறிந்திருந்தோமோவெனில் அதற்கான பதில் இல்லையென்றே என் போன்றவர்களிடமிருந்து வருமென நம்புகின்றேன்!*

*எமது இளமைக் காலத்தில், வடக்கு மாகாணத் தமிழர்களாகிய எமக்கும், கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்குமிடையிற்கூட குறிப்பிடத்தக்க இணைப்பும், புரிந்துணர்வும் இருந்ததாக என்னாற் கூறமுடியாது! எமது பார்வையில் இலங்கையின் தமிழும் தமிழர் வரலாறும், வாழ்வியலும் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே முடங்கிக் கிடந்ததென்றே நினைக்கத் தூண்டுகிறது!*



*புலவர்* நல்லதம்பி சிவநாதன்

*ஏன் வன்னி, மன்னார் போன்ற பிரதேசங்கள் பற்றியே எம்முட் பலர் பெரிதாக அறிந்திருந்தோமென்று சொல்வதற்கில்லை!*

*எனது தனிப்பட்ட அனுபவத்தில் நான் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்கு ஓரிரு தடவைகளே போயிருக்கிறேனென நினைக்கிறேன்! கிளிநொச்சி உருத்திரபுரம் பத்தாம் வாய்க்கால் மாகாவித்தியாலயத்தில் நான் ஆசிரியனாகப் பணிபுரிந்த காலங்களிலே எனக்கு ஏற்பட்ட கல்வி, கலை, கவிதை, இலக்கியப் பிரயாணங்களின் அனுபவங்களினூடாக ஒருசில வன்னிப் பிரதேசங்களிலுள்ள ஊர்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்ததேயன்றி, இவற்றிற்கு அப்பால் ஒரு தேச வரலாற்றுத் தேடலாக இவற்றை நான் கருதியதேயில்லை!*

*கிளிநொச்சியில் நான் கற்பித்த காலங்களில், என்னுடன் கவிஞரும், இன்றைய திரைப்பட நடிகருமான வ.ஐ.ச.செயபாலன், மட்டக்களப்பைச் சேர்ந்த கலியுகன் மற்றும் முத்துசிவன் ஆகிய இளங் கவிஞர்கள் கூடிக் கவியரங்க நிகழ்ச்சிகளை நிகழ்த்தி வந்தோம்! இக்காலங்களில், அரங்குகளிற் கருத்தரங்கங்களும் செய்து வந்ததன் விளைவாக மட்டக்களப்பிலிருந்து திமிலைத் துமிலன் மற்றும் ராஜபாரதி என ஒரு சிலரையும் நாம் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது!*

*அரசியற் களத்தில் நாமெல்லோரும் ஆவலோடும் ஆர்ப்பரிப்போடும் எதிர்பார்த்துக் கேட்டு மகிழ்ந்த சொற்பொழிவாளராக திரு ராஜதுரை அவர்களோடு நான் நேசித்து நெஞ்சு விட்டுப் பழகிய கவிஞர் காசி ஆனந்தன் ஆகிய இருவரும் மட்டக்களப்புடன் எம்மை இறுகப் பிணைத்தவர்களெனக் கூறமுடியும்!*

*எனவே இலங்கையிற் தமிழர்களின் ஆதிக்குடி வரலாற்றை அன்றைய நிலையில் அறிவதற்கான கல்வி, சமூக மக்கள் தொடர்புச் செல்நெறியை எம்மாற் கண்டுகொள்ள முடியவில்லை என்றே கூறலாம்!*

*இலங்கையில் அன்றைய காலத்தின் தமிழிலக்கிய ஏடுகள், இதழ்கள், சஞ்சிகை, ஊடக, வெளிப்பாடுகள்கூட எமது தொல்குடி வரலாறு பற்றியோ, எமது இன அடையாளம் பற்றியோ பெரிதும் பேச முயன்றதாக எனக்கு ஞாபகமிலலை!*

*இலங்கை வானொலியில் அவ்வப்போது ஒருசில கிராமிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகுவதைக் கேட்கும் வாய்ப்புக் கிடைக்க நேரின் இவற்றின் வழியாக ஒருசில தகவல்கள் காற்றிற் தவழ்ந்து வந்து செவிவழியேறி மனதிற் காட்சியாக விரிவதுண்டு!*

*அக்காலங்களில் வீட்டில் வானொலிப் பெட்டி வைத்திருப்பதென்பதே ஓர் அரிய விடயமாக இருந்ததையும் நாம் மறப்பதற்கில்லை! ஏனக்கு இன்றும் பசுமையாக இருக்கிறது, நான் எனது சிறுவயதில் எமது ஊர்ச் சந்தையிலுள்ள ஒரு கடையின் முன்னால் நின்று அக்கடையிலிருந்து வானொலியிலெழும் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டுச் சுவைத்து இன்புறுவதுண்டு! நான் கொழும்பிலிருந்த காலங்களில் இலங்கை வானொலியில் எங்கள் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்(காசி அண்ணா) 'நாளைய சந்ததி'எனும் நிகழ்ச்சியை நடத்தி வந்தார்! அதிலே நானும் பற்குபற்றியுள்ளேன்! இந்த நிகழ்ச்சியை நான் பம்பலப்பிட்டியிலுள்ள ஒரு உணவுக் கடையின் முன்னால் நின்றே முதன் முதலாகக் கேட்டேன்! இதனை நான் கூறுவதற்குக் காரணமென்னவென்றால், நாம் வாழ்ந்த எமது தேசத்தின் அமைப்புப் பற்றியோ, அதனது நிலவரைபு பற்றியோ, அதன் வளங்கள் பற்றியோ கலை, கவிதை, இலக்கியப் பண்பாட்டுப் பரிணாமம் பற்றியோ, அதன் தொல்குடி வரலாறு பற்றியோ, அல்லேல் அதன் தேச உருவாக்கம் பற்றியோ நாம் சரியாகத் தெரிந்து கொள்ள முடியாதவர்களாகவே ஒருகாலத்தில் நாம் வாழ்ந்து வந்துள்ளோமென்ற உண்மையைப் பதிவு செய்வதற்காகவே!*

*அன்றைய காலகட்டத்தில் தம்மைக் கற்றவர்களாகக் காட்டிக் கொண்டவர்களும், அன்று கல்விமான்கள், அறிஞர்களென அரசாலும் கல்விப் பீடங்களாலும் கலை இலக்கியப் பிதாமகர்கள், அவதானிகள், அபிமானிகள், அனுமானிகளாலும் அங்கீகரிப்பட்டவர்களும் எமது சந்ததிக்குக் கையளிக்க முயன்றதெல்லாம் ருசியாவிலும், சீனாவிலும் தான் சொர்க்கமிருக்கிறதென்பதையும், அங்கு தான் மக்கள் சுதந்திரமாகவும், உரிமைகளோடும் வாழ்கிறார்களென்பதையும் அங்கு தான் கவிதை, இலக்கியங்களெல்லாம் மானிடத்தின் உயர்வு நோக்கி ஊற்றெடுக்கின்றன என்பதை யும் வலியுறுத்துகின்ற, முற்றுமுழுதாக ஏற்றுக்கெள்ளுகின்ற ஒரு கருத்துருத்துவாக்க கல்வி, கலை இலக்கிய வாழ்வியல் சமூக பொருளியல் அரசியல் சித்தந்தாத்தையே என்று கூறின் அது மிகையாகாது!*

*எமது முன்னோரின் இலக்கியங்களையும், அவற்றின் செய்யுள்களையும், அவற்றை யாத்த புலவர் களையும் ஒரு பொய்மைக் கோலமாகச் சித்தரித்த பெருங்கைங்கரியத்தை ஆற்றியவர்களுட் பலரை நாம் இந்த வட்டத்திலேயே சேர்க்க முடியும்! சித்தர்கள் ஞானியர் பனுவல்களையும், தமிழர் மருத்துவ, சோதிட, வானியல், வணிக, வரலாற்றுப் பதிவுகளையும் கடற்கோள்கள், பற்றிய புலவர் பதிவுகளையும் உதாசீனம் செய்த பலரை நான் சந்தித்திருக்கிறேன்!*

***(தொடரும்)***



# தடத்திற்கு தடை தரலாமா?

முனைவர் **ஆ. குழந்தை** சென்னை

இங்கிலாந்தில் உள்ள தீவிரவாதச் சட்டம்(2000) பிரிவு 2(1, 2)இன் கீழ் விடுதலைப்புலிகள் இயக்கத்தை இங்கிலாந்து உள்துறை அமைச்சகம் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் சேர்த்து, தடை செய்திருக்கிறது. இந்த தடையை நீக்க நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வழக்கு தொடர்ந்தது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பாக திருமிகு மாயா இலெசுடர், திருமிகு மால்கம் பிர்டிலிங், திருமிகு சேக்கப் ரொபினோலிட்சு ஆகிய சட்டத்தரணிகள் வாதாடினர்(1,2பத்திகள்). அதன் விளைவாக நடுவர் மன்றம் தந்த தீர்ப்பு அறிக்கையில் மூன்று பகுதிகள் உள்ளதாக நான் பார்க்கின்றேன். அந்த மூன்று பகுதிகளை விளக்கி விட்டு, நமது கடமைகளை ஆராய்வோம்.

### சட்டமும் தகுதியும்

தீவிரவாதச் சட்டம்(2000) பிரிவு 2(1) தீவிரவாதத்தை விளக்குகிறது. பிரிவு2(2) பயமுறுத்தும் செயல்கள், தாய்நாட்டையும், உலக நாடுகளையும் பாதிக்கின்ற அல்லது பொது மக்களை அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களை திசை திருப்புகின்ற அரசியல், சமயம், இனம், கருத்தியல் ஆகியவை சார்ந்த மாற்றங்களை உருவாக்குவது தீவிரவாதமாகும் என்று கூறுகிறது. பிரிவு 1(2) மிகவும் மோசமான வன்முறையும், மனிதனுக்கு, சொத்துக்கு, பிற மனிதர்களின் வாழ்வுக்கு, பாதுகாப்புக்கு அல்லது உடல்நலத்துக்கு ஆபத்து தரும் வகையில் உள்ள செயற்பட்டையும் தீவிரவாத செயல்களாக கருதுகிறது. தீ கருவிகள், வெடி மருந்துகள் போன்ற அச்சம் தரும் பொருட்கள் அல்லது செயல்கள், அரசை பாதிக்கும் செயல்கள் போன்றவை தீவிரவாத செயல்களாகும் என்று பிரிவு 1(3) கூறுகின்றது. இந்த தீவிரவாத செயல்கள் இங்கிலாந்து நாட்டிற்குள்ளும் அதற்கு வெளியேயும் நடந்தால், அந்த அமைப்புகள் மீது வழக்குத் தொடுத்து, தடை செய்ய அந்நாட்டிற்கு உரிமை உள்ளது. இந்த சொத்து, மனிதர்கள் உலகில் எவ்விடத்தில் இருந்தாலும், பாதிப்பை ஏற்படுத்திய அமைப்புகளை தடைசெய்ய உரிமை உள்ளது. பொதுமக்கள் என்றால் இங்கிலாந்திற்குள்ளும் வெளியிலும் வாழும் மக்களைக் குறிக்கும். அரசு என்பது தாய்நாட்டு அரசு மட்டுமல்ல உலகில் உள்ள அனைத்து அரசுகளையும் குறிக்கும். தீவிரவாதத்தை வெளிப்படுத்தும் செயல்கள் மட்டுமல்ல தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு பயன் தரும் செயல்களையும் தீவிரவாத செயல்களாக கருத முடியும் என்று பிரிவு 1(5) கூறுகிறது.

இந்த தீவிரவாத சட்டத்தின்கீழ் இயக்கங்களை தடை செய்யவும், தடையை நீக்கவும் இங்கிலாந்து உள்துறை அமைச்சகத்திற்கு அதிகாரம் உள்ளது என்று பிரிவு 3(2) கூறுகிறது. அரசின் செயலர் சாட்சி அறிக்கைகளை நன்கு அராய்ந்து, தடை செய்யப்பட வேண்டிய அமைப்பின் இயல்பு, நோக்கம், செயல்கள் ஆகியவற்றை ஆராய்ந்து, அவை இங்கிலாந்து அரசுக்கு ஆபத்து தருமா? அல்லது காமன்வெல்த் நாடுகளுக்கு ஆபத்து வருமா? தீவிரவாதத்திற்கு எதிராக போராடும் உலக நாடுகளின் அமைப்பு உறுப்பினர்களுக்கு ஆபத்து வருமா? தடைசெய்யப்படவேண்டிய அமைப்பு தனது நாட்டில் இருக்கிறதா? என்று ஆராய்ந்து, தேவையான, தெளிவான தரவுகள் இருந்தால் அரசின் செயலர் தடை செய்யலாம்(3-5 பத்திகள்). ஓர் அமைப்பு தீவிரவாத செயல்களில் ஈடுபடு கிறதா? இந்த அமைப்பு உள்துறை அமைச்சகத்திற் கும் மேல்முறையீட்டு நடுவர் மன்றத்திற் கும் எதிராக உள்ளதா? என்று ஆராய்ந்து பார்த்து செயல்பட வேண்டும். தேவையில்லாமல் ஓர் அமைப்பை தடை செய்யக் கூடாது என்று பிரபு ஆல்டன் வழக்கின் தீர்ப்பை சுட்டிக்காட்டி விடுதலைப்புலிகள் மீது போடப்பட்ட தடையை நீக்க மேல்முறையீடு செய்ய வழி உள்ளதை பயன்படுத்தி மேல்முறையீடு செய்தனர்(6 -8 பத்திகள்).

அரசின் செயலர் கார்தோனோ கோட்பாடு எதிர் பணிகளின் ஆணையம்(1943) வழக்கு போன்ற பல்வேறு வழக்கு தீர்ப்புகளையும், சிறப்பு வெளிநா ட்டவர் மேல்முறையீடு ஆணையச் சட்டம் (1997) பிரிவு 2,(3,4) தரும் அதிகாரத்தையும், கூட்டு தீவிரவாத ஆய்வு மையம், குழுத் தாக்க மதிப்பீட்டு குழு, உலக காமன்வெல்த் அலுவலகம், கொழும்பில் உள்ள இங்கிலாந்து உயர் ஆணையம், தடையை மீளாய்வு செய்யும் குழு ஆகிய அமைப்புகள் கொடுத்து தரவுகளையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகள்மீது தடையை விதித்து, அதைமேலும் நீடித்தார்(9 – 70 பத்திகள்).

### வழக்கும் வாதமும்

அரசின் செயலர் 2009 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டாலும், விடுதலைப்புலிகளும் அதன்



ஆதரவாளர்களும் தொடர்ந்து தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்றனர். இறந்துபோன விடுதலைப் புலிகளையும், நடந்த நிகழ்வுகளையும் நினைவு கூருவது தீவிரவாதத்தை தூண்டுவதாக இருக்கின்றது. மீண்டும் விடுதலைப்புலிகள் உருவாகி, இலங்கை அரசுக்கும், உலக நாடுகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்துவார்கள். இவைபோன்ற காரணங்களை சொல்லி தடையை போட்டு, அதை மேலும் நீடித்தனர். ஆனால் நாடுகடந்த தமிழீழ அரசாங்க சார்பில் வாதாட வந்த சட்டத்தரணிகள், அரசின் செயலர் முன்வைத்த காரணங்களை மறுத்து வாதாடினர்.

ஒன்று. 2018 ஆம் ஆண்டு சூன் திங்கள் வெடி மருந்துகள், ஆயுதங்கள் வைத்திருந்த சிலரை கைது செய்தனர். அதுபோல அதே ஆண்டில் நவம்பர் திங்களில் இரண்டு அரசு காவலர்கள் கொலை செய்யப்பட்டனர். இந்த இரண்டு நிகழ்வுகளை வைத்து விடுதலைப் புலிகள் தீவிரவாத செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று கூறமுடியாது. ஏனென்றால் கைது செய்யப்பட்டவர்கள் குற்றமற்றவர்களாக விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிகழ்வுகளை விடுதலைப்புலிகள் மீது சுமத்த முடியாது.

இரண்டு. நினைவு தினங்களை கொண்டாடுவது அந்த இயக்கத்தின் கருத்தியல் தாக்கத்தின் காரணமாக வருகிறது. நினைவுத் தினங்களை கொண்டாடுகின்றவர்களை விடுதலைப்புலிகள் என்றும், அந்த நினைவுகள் தீவிரவாதத்தை தூண்டுகிற தென்றும் கூறமுடியாது.

மூன்று. விடுதலைப்புலிகள் மீண்டும் உருவாகி அச்சத்தை தருவர் என்பது ஒரு கற்பனைக் கதையாகும். அரசு செயலர் முழுமையாக எதிர்வாதத்தினர் தரும் தரவுகளை ஆராயாமல், மேலோட்டமாக சிந்தித்து செயல்படுவது ஈழத்தமிழ் மக்களுக்கு பெரும் ஆபத்துகளை ஏற்படுத்தும் என்று எடுத்துரைத்தனர்.

ஓர் அமைப்பின் உண்மையான நிலையை நன்கு அறிந்து கொள்ளாமல் தடைசெய்வது பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை வழங்கும் உரிமைச் சட்ட எண்களுக்கு(10, 11) எதிராக செயல்படுவதைச் சுட்டிக் காட்டுகிறோம். இலங்கை, இந்திய அரசுகளை நிறைவுபடுத்த இந்த தடையைக் கொண்டு வந்திருக்கின்றனர். இந்த தடையின் பின் விளைவுகளை நன்கு ஆய்வு செய்யாமல் செயல்படுவது அரசின் செயலரின் அறியாமையை வெளிப்படுத்துகிறது என்று வாதாடினர். அதனால் தடையை நீடிப்பதற்கு தேவையான ஆதாரங்களும், அறிவும் இல்லாததால் தடையை நீக்குமாறு கேட்டுக் கொண்டனர்(71 – 116 பத்திகள்).

### தீர்ப்பும் திருப்பமும்

விடுதலைப்புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடை சட்டரீதியாக இருப்பதாக தெரியவில்லை. மேலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை




செய்வதற்கு கொடுக்கப்பட்ட காரணங்களும், கூறுகளும் தவறானவையாக, குறைவானவையாக, ஆய்வற்றையாக இருப்பதால் விடுதலைப்புலிகளைத் தடை செய்தது தவறானது என்று தீர்ப்பளித்தனர். மேல்முறையீட்டுக்குச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்றால், 28 நாட்களுக்குள் உள்துறை அரசின் செயலரும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் தேவையான ஆதாரங்களைக் கொடுத்து ஆய்வு செய்ய வேண்டும். இங்கு அதைப் பற்றி நடுவர் மன்றம் எதுவும் சொல்ல விரும்பவில்லை(118 -119பத்திகள்). எனவே திறந்த தீர்ப்பும், மூடிய தீர்ப்பும் எங்களது முடிவை மறைக்காமல் ஆதரிக்கின்றன(120 பத்தி). இந்த தீர்ப்பால் இதுவரை உலகம் முழுவதும் விடுதலைப்புலிகளைப்பற்றி தவறாக பரப்பப்பட்ட கருத்தில் மாற்றம் எழுந்துள்ளது. தடையை மறுபரிசீலனை செய்ய வாய்ப்பு ஏற்ப ட்டுள்ளது.

### கடமைகள்

இந்த வழக்கை நடத்திய நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை பாராட்டுகிறோம். இனி மேல் நமக்கு அதிக பணிகள் இருக்கின்றன.

**ஒன்று.** நமது கொண்டாட்டத்தை விட் டுவிட்டு 28 நாட்களுக்குள் கொடுக்கப்பட வேண் டிய தரமான, அறிவார்ந்த தரவுகளை தேடிக் கொடுக்க வேண்டும். நாம் முன்னெடுக்கின்ற கொண்டாட்டங்கள் எதிரிகளை தேவையில்லாமல் தூண்டிவிட்டு, நாம் முன்னெடுக்கும் செயல்களுக்கு நாமே தடையாக மாறி விடுகிறோம்.

**இரண்டு**. இந்த தீர்ப்பு விடுதலைப் புலி

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்



# தெரு ஓவியங்களும் மென்வலுவும் (soft power) கலாச்சார சாணக்கியமும் (cultural diplomacy)


பகுதி 02

அழகுகலைப் பண்புகள், கலாச்சார, பண்பாட்டு நுணுக்கங்கள் Joseph Nye குறிப்பிடுகின்ற மென்வலுவாக (soft power)அடக்கு முறைக்கு எதிராக உள்வாங்கப்பட வேண்டிய தேவை சனநாயக வெளி மூடப்படுகின்ற சூழலில் எழுகின்றது. இவ்வெழுச்சி ஆக்கபூர்வமான அழிவினூடாகவும் முன்வைக்கப்படலாம். மேலாண்மை அடக்கு முறைச் சொல்லாடலை சமூகவியல், அரசியல், அழகியல், மானுடவியல், வரலாற்றியல் இன்னும் பிற தளங்களில் கட்டவிழ்ப்பது ஆக்கபூர்வமான அழிவாகக் கொள்ளப்படலாம். இதற்கான உந்துதல் பிக்காசோ குறிப்பிடுகின்ற ஆக்கபூர்வமான உந்துதலாக இருக்கலாம். 'பிக்காசோ பலஸ்தீனத்தில்' (Picasso in Palestine Project)' என்ற செயற்றிட்டத்த நடைமுறைப்படுத்தியவர்களின் அனுபவங்களிலிருந்து வாசிக்கின்ற போது, பிக்கா சோவின் ஓவியம் பலஸ்தீனத்திற்கு எடுத்து வரப்பட்ட அனுபவம், அந்த ஓவியம் ஏற்படுத்திய அதிர்வலைகள், அதன் பின்னரான கொதிநிலை எல்லாமே அரசியல் சார்ந்தது. வெறுமனே அழகியல் சார்ந்தது மட்டுமல்ல. அடக்குமுறையைப் பிரதிபலிப்பதும், பிரதிநிதித்துவப்படுத்துவதற்குமான பொதுப் படிமம், குறியீடு.

அப்படிமம் இன ஒருங்கிணைப்பை, இனத்தால் அல்லது இன அடையாளத்தால் ஒடுக்குமுறைக்குள்ளாவதனால், ஒருங்கிணைப்படுகின்றோம் என்ற பொது அடையாளப்படுத்தலும், உரிமங் கொள்ளலும், பொது இயக்கமாதலும், பொதுபடிமமையத்தினை இயங்கு தளமாக்கிய வெளியும் அவசியமாகின்றது.

அழகியல் சாணக்கியம் (Aesthetic diplomacy) வடக்கு-கிழக்கைச்சார்ந்து அவதானிக்கின்ற போது, அரசு அல்லாத இயக்கியால் மட்டுமே உருவாக்கப்பட முடியும். (Non-State actor) அவ்வாறான இயக்கியின் இயங்குதளம் விளிம்பு மையத் தந்திரோபாயத்தை கொண்டிருத்தல் அவசியமாகின்றது. Joseph Nye யினுடைய மென்வலு பூகோள மயப்படுத்திய சந்தைப்படுத்தலைஉத்தியாகபயன்படுத்துகின்றது. அது பண்பாடு, விழுமியம், கலை இன்னும் பிற சார்ந்ததாக அமையலாம். Joseph Nye குறிப்பிடுகின்ற மென்வலு பின்வரும் மூன்று பண்புகளில் தங்கியிருப்பதாக கூறுகின்றார். கலாச்சாரம், அரசியல் விழுமியங்கள், வெளியுறவுக் கொள்கைகள் (பக்கம் 97). இதனூடான அணுகு முறையும், தொடர் உறவாடலும் நீண்ட கால இலக்குக் கொண்டது.

தெரு ஓவியங்களில் பிரதிபலிக்கும் கலாச்சார மேலாண்மை கொண்ட ஓவியங்கள் மேலாண்மை அடையாளக் கட்டமைப்பிற்கு மிக இன்றியமையாதவை. அடக்கு முறை சார்ந்து எழுகின்ற தெரு ஓவியங்களின் அடக்கப்படுகின்ற மக்களின் கலாச்சார மீளெழுச்சியை முதன்மைப்படுத்துகின்ற, மீள உறுதிப்படுத்தி வலியுறுத்துகின்ற படிமங்கள் கலாச்சார சாணக்கியத்திற்கூடாக (Cultural diplomacy) தேசக் கட்டுமானத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.



மிக அண்மைய காலங்களில் கலாச்சார சாணக்கியம், நாடுகளுக்கிடையே உறவுகளை ஏற்படுத்தவும், பலப்படுத்தவும் ஒரு கருவியாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது. கலாச்சார சாணக்கியம் தொடர்பான விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. சிலர் இதனை ஏகாதிபத்தியத்தின் சிந்தனைக் கருமுகமாக விபரிக்கின்றனர். அதிசக்தியுடைய அரச அல்லது அரசசார் பற்ற முகவர்களின், நாடுகளுக்கிடையிலான அல்லது நாடுகள் கடந்த நிலையிலான தொடர்புகளை முகாமைத்துவம் செய்வதைக் குறிக்கின்றது. நாடு கடந்த நிலையில் அரச, அரசசார்பற்ற முகவர்களுக்கு எங்களுடைய இலக்கினை எவ்வாறு கலாச்சார சாணக்கியத்தினூடு மெய்மை உறைபித்தல் ஆய்வு செய்யப்பட வேண்யது. கலாச்சார சாணக்கியத்தில் அரசசார்பற்ற முகவர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. மேற்குறிப்பிட்ட பங்களிப்பு பன்முகப்படுத்தப்படுவதில், குறிப்பாகமையை ஆட்சியை வலுத்தளர்த்துவதில் பிரச்சினைகளும் இல்லாமல் இல்லை. அது ஒரு வகையில் முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான அரசியல் வரலாற்றுத் தளத்தில் தமிழினம் பட்டறிவுடன் கண்ட அனுபவம்.

மையம் தவிர்த்து பன்முகப்படுத்தப்பட்ட தந்திரோபாயத்தின் கூட்டு கட்டமைக்கப்பட்டமையால் பன்முகப்படுத்தப்பட்ட முகவர்களினால் கட்டமைக்கப்பட்ட இலக்குகள் தொடர்பிலும், அதன் அணுகுமுறை தொடர்பிலும் ஒன்றுக்கொன்று முரண்பாடான, மறுதலித்த புதிய யதார்

**எழில்**

த்தத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முரண்பாட்டுப் பிரதிபலிப்பு எதிர்மறை விளைவுகளை உருவாக்கிக் கொண்டிருந்தது. இவ்வாறான முரண்பாட்டுச் சூழலில் உருவான எதிர்மறை விளைவுகளை கட்டமைக்கக் கூடிய அரசசார்பற்ற முகவர்களின் செல்வாக்கு அதிகரித்து, அவர்கள் இலக்கிற்கு முற்றிலும் முரணான புதிய முகவர்களாக மாறியிருந்தனர் (Kelley 2010). மேற்குறிப்பிட்ட புதிய யதார்த்தத்திற்குஇணையத்தளப்பயன்பாடும், தொழிநுட்ப வளர்ச்சியும் காத்திரமான பங்களிப்பை ஆற்றியிருக்கின்றன. நாடு கடந்த ஆனால் கலாச்சாரங்களுக்கிடையே ஏற்படுத்தப்படும் தொடர்பாடல்கள், கலாச்சார சாணக்கியத்தின் தளத்தை இன்னும் விரிவாக்கின என்று கூறலாம்.

Joseph Nye யினுடைய 'மென்வலு' முன்வைப்புத் தொடர்பாக விமர்சனங்கள் நிறையவே எழுந்துள்ளன. 'மென்வலுக்' கருத்தாக்கம் அமெரிக்க உருவாக்கம் என்பது மட்டுமல்லாமல், 'மென்வலுச்' சொல்லாடல் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை சொல்லாடல்களுள் உள்வாங்கப்பட்டு, அது முற்போக்கான கருத்தியலாக ஏனைய நாடுகளிலும் விவாதத் திறகுட்படுத்தப்பட்டது. இச் சொல்லாடலின் பொருத்தப்பாடு அமெரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகளில் கேள்விக்குட்படுத்தப்பட்டது. அதற்கு மாற்றீடான சொல்லாக, உதாரணத்திற்கு 'மாற்றத்திற்கான சக்தி' (transformative power), சிவிலியன் சக்தி போன்றன மேற்குலக அரசியற் பரப்பில் முன்வைக்கப்பட்டது.

சீனாவின் அரசியற் பரப்பில் 'மென்வலு', 'பண்பாட்டு வலுவாக'(culural power)) (A.Patalakh – 2018) மாற்றமடைந்தது. மென்வலுவினுடைய பிரதான பொறிமுறையாக 'வசீகரம்', 'கவர்ச்சி' (attraction)) இயங்குகின்றது. 2009இல் Joseph Nye முன்வைத்த மென்வலுவிற்கான முதன்மைக் காரணியாக 'கவர்ச்சி' அமைகின்றது. அது நாளடைவில் சிக்கலுக்குட்படுத்தப்பட்டது. இராணுவ, பொருளாதார வலுவும் கவர்ச்சியானதாக இருக்கலாம் என்றதன் அடிப்படையில் (A.Patalakh 2015 unpublished) மீண்டும், கருத்தாய்வு மீள் வாசிப்பின் பின் 2011இல் பின்வருமாறு மீள் வரைவிலக்கப்படுத்துகின்றார். 'ஒரு தனிநபர் விரும்பிய விளைவுகளைப் பெறுவதற்கு ஒத்துத் தேர்ந்தெடுத்தல் (Co-optive means) வழிமுறைகளைக் கையாளுதல், அவை நிகழ்ச்சி நிரல் கட்டமைப்பு, இணங்குவித்தல், நேர்மறைக்கவர்ச்சி (2011a.19) போன்றன. மேற்கூறப்பட்ட பண்புகளைக் கொண்ட சாணக்கியம் 'வலுப்' பின்புலம் அற்ற முகவர்களால் குறிப்பாக அரசசார் பற்ற முகவர்களால், நடைமுறைப்படுத்த முடியுமா என்பது சிக்கலுக்குரியது. வலுப் பின்புலத்தினூடு தான் நிகழ்ச்சித் திட்டமைப்பும், இணங்குவித்தலும் நடைமுறைச் சாத்தியமாகும். Antonio Gramsciயினுடைய மேலாதிக்கத்தன்மை (hegemony) பற்றிய புரிதல் அவசியமாகின்றது.

Joseph Nye தன்னுடைய எழுத்துக்களிலே 'வன்வலு' விற்கானதும் 'மென்வலு'விற்கானதுமான இடைவெளி அல்லது வித்தியாசம் குறித்து தெளிவின்மையைக் கொண்டிருந்தாலும், ஒரு தருணத்தில் 'கொள்கை மையப்பார்வையில் 'வன்வலு', 'மென்வலு' விற்கிடையே உள்ள உறவு சிக்கலானது. சில வேளைகளில் இரண்டுமே ஒன்றையொன்று உறுதி செய்கின்றன. சில வேளைகளில் ஒன்றையொன்று விலக்குகின்றது. (Eg.20116, 22-23) அதனால் 'வன்வலு'வும் 'மென்வலுவும்' உள்ள வளங்களை இணைத்து 'வினைத்திறன் மிக்கவலு' (Smart power) என்ற கருத்துருவாக்கத்தை முன்வைக்கின்றார்.

### தெரு ஓவியமும் சனநாயகமும்

தெரு ஓவியத்திற்கும், தெரிவு செய்யப்பட்ட அல்லது திட்டமிடப்பட்ட சொல்லாட்சிக்கும் (deliberative rhetoric) இடையிலான தொடர்பு முக்கியமானது. திட்டமிடப்பட்ட சொல்லாட்சி மக்களை ஒரு புதிய கோணத்தில் பார்க்க அழைப்பதோடு, அது தகவலையும், அறிவையும் கொடுக்கின்றது. அதன் விளைவாக ஆழ்ந்து சிந்திக்க (reflective) அழைப்பு விடுக்கின்றது. (Chawlers 2009) மேற்குறிப்பிட்ட செயற்பாடு ஒரு கருத்துருவாக்கத்திற்கு மக்களை வழிநடத்திச் செல்கின்றது. இக்கருத்துருவாக்கம் ஏற்கனவே உள்ள சொல்லாடல் செல்நெறியில் செல்வாக்குச் செலுத்தும். ஒலிவியர் டபேன் (Olivier Dabene) தெரு ஓவியம் மூன்று விதங்களில் சனநாயகத்திற்கு பங்களிப்புச் செய்வதாகக் குறிப்பிடுகின்றார் (2020) முதலாவது அரசியல் வெளிப்படுத்தலை மேம்படுத்தல் (Enhancing Political Expression) இரண்டாவது நகர குடியுரிமையும் அதிகாரம் கொடுத்தலும் (empowerment and Urban citizenship) மூன்றாவது பொது வெளியை நீட்சியாக்கல் அல்லது விரிவுபடுத்தல் (stretching the public sphere) மேற்கூறப்பட்ட மூன்றையும் தனித்தனியாக ஆராயலாம்.

### அரசியல் வெளிப்படுத்தலை மேம்படுத்தல்

இது குறித்து ஏற்கனவே முதலாவது பாக

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## தெரு ஓவியம் ... தொடர்ச்சி...




த்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பொதுவெளி என்ற தலைப்பில் ஓரளவிற்கு பார்த்திருக்கின்றோம். விமர்சனக் கோட்பாட்டாளர்களின் பார்வையில் சனநாயம் என்பது, 'அரசியலுடன் உரையாடுவதற்கு அல்லது ஈடுபடுவதற்கு ஒருவருக்குள்ள சுதந்திரமே சனநாயகத்தை தீர்மானிக்கின்றது'(O.Dabene 2020). *Downey (2014)* சொல்லுகின்ற விளக்கமும் இங்கு கருத்தில் கொள்ளப்படுவது சிறந்தது. 'அரசியல் எனப்படுவது தீர்மானித்தல் அடிப்படையில் முடிவு செய்யப்படுமாயின், உதாரணமாக யாருக்குப் பேசுகின்ற அதிகாரம் உள்ளது, கேட்கப்படுகின்ற அல்லது பார்க்கப்படுகின்ற தளத்தில் தற்கால ஓவியம், அரசியலையும் அதன் செல்நெறியையும், வெவ்வேறு உத்தியினூடு சிக்கலுக்குட்படுத்துகிறது, விரிவாக்குகின்றது, மீள் - கற்பனை செய்கின்றது என்பது விளங்கும்' (2014)

சனநாயக வெளி சுருங்கும் போது அல்லது இறுக்கமடையும் போது தெரு ஓவியங்களினூடாக அவ் வெளியை விரிவுபடுத்தல் என்பது அவசியமாகின்றது. இது நடைமுறைச் சாத்தியமா என்ற கேள்விகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் குறிப்பாக பிரேசில், ஆர்ஜென்டினா போன்ற நாடுகளின் தெரு ஓவியர்களின் அனுபவம் எங்களுக்கு வழிகாட்டலாம். ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்ட பொதுவெளியை மீளப்பெற்று அரசியல் தெரு ஓவியத்தை, எதிர்ப்பின் மாற்று ஊடகமாக மாற்றுவதென்பது வெறுமனே ஓவியம் சார்ந்த விடயமல்ல, நம்பிக்கை சார்ந்தது.



அடக்குமுறைக்குள், அடக்குமுறைக்கெதிரான மிகச்சிறிய விடயமும் அதிகாரம் அல்லது நம்பிக்கை இழந்தவர்களுக்கு அதிகாரத்தையும் நம்பிக்கையையும் அளிப்பதாகும். பிரதிநிதித்துவ சனநாயகத்தில், குறிப்பாக சிறீலங்காவில் கடந்த பாராளுமன்ற, சனாதிபதி தேர்தல் சிறுபான்மை இனங்களின், எண்ணிக்கை அடிப்படையில், வாக்குகளை செல்லாக் காசாக்கியுள்ளன. சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகள், பல்லைப் பிடுங்கிய சிறுத்தைகளாக்கப்பட்ட நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிநிதித்துவ சனநாயக செய்முறை மூலம் எதிர்ப்பை, மாற்றத்தை ஏற்படுத்துவதென்பது சிக்கலான விடயமாகவே தென்படுகின்றது. இந்த நிலையில் அடக்கப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவ ஊடகமாக தெரு ஓவியம் மாற்றப்பட்டுள்ளது. மெக்சிகோ, ஆர்ஜென்ரீனா, சிலி போன்ற நாடுகளில் மேற்குறிப்பிட்ட அடக்குமுறையையும், அதன் எதிர்ப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தும், பிரதிபலிக்கும் ஓவியர்களும் சமூக செயற்பாட்டாளர்களே ஏனெனில் மக்களுக்கான மாற்று வழியைச் சிந்திக்க தெரு ஓவியங்கள் உதவி செய்கின்றன.

### நகர குடிமையும் அதிகாரம் கொடுத்தலும்



*Roland Barthes* குறிப்பிடுகின்ற 'படைப்பாளியின் இறப்பு'(*death of the author*) அவருடைய கருத்துப்படி குறிப்பாக இலக்கிய விமர்சனத்தில் படைப்பாளி கலந்துரையாடலின் மையப்புள்ளி அல்ல மாறாக 'படைப்பு'. படைப்பாளியின் படைப்பே மையப்புள்ளியாக மாறுகின்றது. அது போலவே தெரு ஓவியத்திலும், ஓவியர் மறைந்து, ஓவியரின் படைப்பே சனநாயகப் புரட்சிக்கான மையப்புள்ளியாக மாறுகின்றது. ஓவியர், ஓவியத்தின் விவரணத்தை பார்வையாளரின் கையில் விட்டு விடுகின்றார். இந்த உத்திதான் அரசியல் மேலாதிக்க சொல்லாடலைக் கட்டவிழ்க்கின்றது. அதற்குப் பின்னால் சனநாயக கட்டமைப்பின் உள் நோக்கம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. *(Nachtergeal (2015)* பொது வெளியூடு அடக்கு முறைக்கெதிரான பிரதிநிதித்துவத்தை தெரு ஓவியங்களுக்கூடாக வெளிப்படுத்துதல், *Semiotic democracy* எனக் கூறப்படுகின்றது. *Lyman Chaffee (1993)* தெரு ஓவியம் பற்றி குறிப்பிடுகையில் 'தெரு ஓவியம் வாக்குரிமை பறிக்கப்பட்டவர்களுக்கான வெகு ஜன ஊடகம்' எனக் குறிப்பிடுகின்றார்.

சிறீலங்காவில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக உள்ளவர்களின் நிலை என்பது வாக்கு இருந்தும் வாக்குரிமை பறிக்கப்பட்ட நிலை. *Cassandra* வும் *Guick (2015)* மேற்குறிப்பிட்ட அந்த நிலையை பெண் ஓவியர்கள் ஆணாதிக்க ஓவிய வெளியில் சமத்துவம் தேடுதல் போன்றது என குறிப்பிடுகின்றனர். *Dryzek (2000)* கருத்துப்படி அரசியல் பொறுப்புக்கூறல் தொடர்பில் தெரு ஓவியங்கள் வீரியமான பங்களிப்பை வழங்கலாம். இவ்வாறாக அவர் குறிப்பிடுகின்ற *'Difference Democracy'* வரலாற்று ரீதியாக அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுக்கும்'. நகர குடிமை என்று Holston (2008) குறிப்பிடுவது அரசுக்கு எதிரான கிளர்ச்சியை நோக்காகக் கொண்டது. உரிமைகளை பெறுவதற்கும், நிலை நிறுத்துவதற்கும், அடக்கு முறைக்கெதிராக கருத்துருவாக்கம் செய்கின்ற ஓவியர்களின் தூரிகை பலமானது. இவர்களின் கூட்டுப்பலம் புதியதொரு சனநாயக வெளியை திறக்கவல்லது.

### பொதுவெளியின் நீட்சி



*Olivier Dabene* இவ் நீட்சி மூன்று தளங்களில் நிகழ்வதாகக் குறிப்பிடுகின்றார். முதலாவது தளத்தில் புதிய செயற்பாட்டாளர்கள் உள்வாங்கப்படுகின்றனர். குறிப்பாக பொது விவாதங்களிலும், கலந்துரையாடல்களிலும், இரண்டாவது, பொது வெளியின் நீட்சி, ஓவிய வெளி தொடர்பாக, மூன்றாவது இணையத்தள பாவனையால் உருவாக்கப்பட்ட எண்ணிம பொது வெளியும் *(Virtual space)* அதன் நீட்சியும். பொது வெளி பெரும்பாலும் அதிகாரம் கொண்டவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும், விளிம்பு நிலை *(Subaltern)* மக்களுக்கான பொதுவெளி மறுக்கப்பட்டே வந்துள்ளது. இது தாராளவாத சனநாயக வெளியில் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கான சனநாயக வெளியை உருவாக்கக் கூடிய சனநாயக விழுமியங்களை வரவேற்கின்ற மனநிலை உண்டு. ஆனால் ஏனைய ஆட்சி முறைகளில் இந்த வெளியின் உடைப்பைச் சாத்தியமாக்கக்கூடிய பலம் தெரு ஓவியர்களிடமே அதிகமாகவே உள்ளது.

• • •

## எமது தாயகப் ... தொடர்ச்சி...

ளுக்கு ஏற்பட்ட நிலைமை, இன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையினை நாங்கள் கட்டுப்படுத்தி, எமது தாயகப் பகுதியின் இதயப் பகுதியை பாதுகாக்க வேண்டுமானால், எதிர்காலத்தில் சிறந்த திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டு, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை பாதுகாப்பதற்கான கட்டமைப்பு ஒன்றினை உருவாக்க வேண்டும்.

அந்தக் கட்டமைப்பானது, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ்த் தேசியத்துடன் செயற்படும் சிவில் சமூக பிரதிநிதிகள், நிபுணர்கள், ஊடகவியலாளர்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், வர்த்தகர்கள், தமிழ் தேசிய அரசியலில் உள்ள அரசியல்வாதிகள் ஆகியோர் இணைக்கப்பட்டு, இந்த குழு அமைக்கப்பட வேண்டும்.

அதன் ஊடாக பிரதேசங்களில் உள்ள வளங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, அவற்றினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக காணிகளை பாதுகாக்க முடியும் என்பதுடன்; பொருளாதார ரீதியான வளர்ச்சியையும் ஏற்படுத்தி. வேலையில்லா திண்டாட்டங்களை தமிழர் பகுதிகளில் குறைத்திடவும் வழியேற்படுத்தும்.

இவற்றினை நாங்கள் வடகிழக்கு மாகாணங்களில் செயற்படுத்தும்போதே எமது காணிகளையும், எமது வளங்களையும் பாதுகாக்க முடியும். மாறாக நாங்கள் எமது பகுதிகளை அபகரிக்கும்போது, வெறும் பார்வையாளராக இருந்துகொண்டு, காரசாரமான பதிவுகளை இடுவதன் மூலமோ புலம்பெயர் தேசங்களில் ஆர்ப்பாட்டங்களை நடாத்துதன் மூலமோ எமது காணிகளை பாதுகாக்க முடியாது.

இனிவரும் காலங்களிலாவது வடகிழக்கில் உள்ள தமிழ் தேசியவாதிகளும், புலம்பெயர்ந்துள்ள தமிழ் தேசியவாதிகளும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே கிழக்கு தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்து வருகின்றது.

• • •

## ஐ.நா. நிகழ்வுக்கு ... தொடர்ச்சி...

உரை நிகழ்த்தியிருந்தார். இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஐக்கிய நாடுகள் பணிப்பாளர் லூயிஸ் சார்போனே அறிக்கையொன்றை வெளியிட்டு இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் பரவும் ... தொடர்ச்சி...

பிரிவை சேர்ந்த வல்லமை மிக்க வைரஸ் என சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் சஞ்ஜீவ முனசிங்க தெரிவிக்கின்றார்.

இலங்கையில் இதற்கு முன்னர் கண்டறியப்பட்ட வைரஸ்கள், B.1, B.2, B 1.1, B.4 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவை எனக் கூறும் அவர், இந்த வைரஸ், கடந்த காலங்களில் பரவிய வைரஸை விடவும் அதிக வீரியம் கொண்டமையினால், குறித்த வைரஸ் அதிவேகமாக பரவும் வல்லமையை கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




# பூர்வீகக் குடிமக்கள் சார்பான உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை உதாசீனம் செய்கிறது அமெரிக்கா

மக்கேட் - ஒக்லஹோமா (McGirt vs Oklhma) விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் கடந்த ஜூலை மாதத்தில், மேற்கொண்ட மிக முக்கிய தீர்மானம், ஐக்கிய அமெரிக்காவில் வாழுகின்ற பூர்வீகக்குடிகளைச் சேர்ந்தவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இவ்விடயம் தொடர்பாக கீழ் நீதிமன்றம் ஏற்கனவே அளித்திருந்த தீர்ப்பை மேற்குறிப்பிட்ட தீர்மானம் தலைகீழாக மாற்றியது. நீதிமன்றத்தின் பார்வையை வெளிப்படுத்திய ஆவணத்தின் முதற் பக்கத்தின் கடைசி இரண்டு வரிகள் அதனை இரத்தினச் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது. “கூட்டாட்சிக் குற்றவியற் சட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் வாக்களிக்கப்பட்ட நிலங்கள் (பூர்வீக) உண்மையில் இந்திய மக்களுக்கு உரித்தான பிரதேசங்களா என்ற கேள்வி இன்று எங்களிடம் முன்வைக்கப்படுகிறது. அமெரிக்க காங்கிரஸ் இதற்கு மாறாக எதுவும் தெரிவிக்காதபடியால் அரசு தமது வாக்கைக் காப்பாற்றும் என நம்புகிறோம்.”



முக்கிய குற்றச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஒக்லஹோமா மாநிலத்தில், முஸ்கோகீ (Muscogee) மக்களுக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசம், பூர்வீகக்குடிகளுக்குரிய நிலமாகவே இருக்கும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த அமெரிக்கர்களைப் பொறுத்த வரையில், பூர்வீகக் குடிகளாகிய தம்மை அங்கீகரித்த ஒன்றாகவே ‘மக்கேட்’ தீர்ப்பை, அவர்கள் கருதினார்கள். ‘ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மதிக்கப்படவேண்டும்’ என்ற ஓர் பிரகடனமாக அத்தீர்மானம் பார்க்கப்பட்டது. அமெரிக்காவுக்கும் பூர்வீகக் குடிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட இந்த மக்கள் கூட்டங்களுக்கு இடையேயான ஒப்பந்தங்கள், அமெரிக்க அரசியலமைப்புச் சாசனம் வரையறுப்பது போன்று, நாட்டின் அதியுயர் சட்டம் என்பது மட்டு மன்றி பூர்வீகக் குடிமக்க ளின் இறைமைக்கு, அதாவது தம்மைத் தாமே ஆட்சி செய்வதற்கு பூர்வீகக் குடிகள் கொண்டிருக்கும் அதிகாரத்தை உறுதிப்படுத்தியதோடு, பூர்வீகக்குடிகள் தமது நிலங்களின் மேல் கொண்டிருக்கும் உரிமையையும் மீள வலியுறுத்தியிருக்கிறது. இவ்வா றான காரணங்களினால், பூர்வீகக் குடிகளுக்குச் சொந்தமான நிலங்களில், தமது மக்களுக்கான நீதிப் பரிபாலன நடைமுறைகளை மேற்கொள்ளும் அதிகாரம் அவர்களுக்கே உரியதாகும். நீதிப்பரிபாலனம் என்று சொல்லும்போது, வரிகளை அறவிடும் அதிகாரமும் ஏனைய ஒழுங்குகளை மேற்கொள்ளும் அதிகாரமும் பூர்வீகக் குடிகளுக்கே உரியதாகும்.

ஆனால் வரலாற்றைப் பார்க்கும் போது, நாங்கள் அதிகமாக மகிழ்ச்சியடைய முடியாது. அதிபர் டொனால்ட் ட்ரம்பினால் உச்ச நீதிமன்றத்தின் நீதியரசராக நியமிக்கப்பட்ட, நீல் கோர்சச் (Neil Gorsuch) வெளிப்படுத்திய கருத்து, அதிபர் ட்ரம்புக்கும் அமெரிக்க பூர்வீகக் குடிகளுக்கும் இடையே நிலவுகின்ற உறவைப் பிரதிபலிக்கவில்லை. அமெரிக்க பூர்வீகக் குடிகள் தொடர்பாக,




அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் தொடர்ச்சியாக எதிரான நிலைப்பாட்டையே கடைப்பிடித்து வந்திருக்கிறது. கூட்டாட்சி அரசாங்கத்தின் கடந்தகால வரலாற்றை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்ச்சியாக மீறப்படும் வரலாறே காணப்படுகின்றது. ஆகவே ‘மக்கேட் எதிர் ஒக்ல ஹோமா’ என்ற விடயத்தில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு விரைவாகவே மீறப்படும் என நாம் எதிர்பார்த்தோம்.

தமிழில் **ஜெயந்திரன்**

நாம் எதிர்பார்த்தது போலவே, மூன்று மாதங்களுக்கு பின்னர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு (Environmental Protection Agency - EPA) பூர்வீகக் குடிகளுக்குச் சொந்தமான பிரதேசங்களில், சுற்றுச்சூழல் சார்ந்த விடயங்களில் நீதிப் பரிபாலனத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை ஒக்லஹோமா மாநிலத்துக்கு வழங்குவதை உறுதிப்படுத்துகின்ற ஓர் உத்தியோகபூர்வக் கடிதத்தை அந்த மாநிலத்துக்கு அனுப்பி வைத்தது. இந்நடவடிக்கையை நியாயப்படுத்த ட்ரம்ப் நிர்வாகம், பொதுச்சட்டம் 109-59ஐப் பயன்படுத்தியது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பின் நிர்வாக அதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கப்படும் பட்சத்தில், சுற்றுச்சூழல் தொடர்புபட்ட விடயங்களில் பூர்வீகக் குடிகளுக்குச் சொந்தமான பிரதேசங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை ஒக்லஹோமா மாநிலத்துக்குப் போக்குவரத்து மசோதா வழங்குகிறது. மக்கேட் தீர்ப்பு அளிக்கப்பட்டு 13 நாட்கள் கடந்த நிலையில், புதை படிவ எரிபொருள் (fossil fuel) ஆதரவாளராக விளங்குகின்ற, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஆளுநரான கெவின் ஸ்ரிற் (Kevin Stitt) இதைத்தான் செய்தார். அவரது வேண்டுகோளுக்கு அனுமதி அளித்ததன் மூலம் சுற்றுச்சூழல் விடயத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றியிருக்கிறது. உண்மையில் மக்கேட் - ஒக்லஹோமா தீர்ப்பு என்ற ஒன்று அளிக்கப்பட வேயில்லை என்பது போலத்தான் இந்தச் சுற்றுச் சூழல் அமைப்பின் செயற்பாடு நடைபெற்றிருக்கி றது.

தாம் வழங்கிய அனுமதிக்கடிதத்தில், ஒக்ல ஹோமா மாநிலம் கேட்டிருந்த அனைத்துக் கோரிக் கைகளுக்கும் சுற்றுச்சூழல் அமைப்பு அனுமதி வழங்கியதோடு மட்டுமன்றி, மேலதிக சில அனுமதிகளையும் இணைத்திருந்தது. மூல வளங்களைப் பாதுகாத்து மீட்கும் சட்டம் (RCRA), தூய்மையான காற்றுச்சட்டம் (CAA), தூய நீர்ச் சட்டம் (SDWA), பாதுகாப்பான குடிநீர்ச் சட்டம் (SDWA) பூச்சி கொல்லிகள், பங்கசு கொல்லி, கொறிக்கும் விலங்கு கொல்லி போன்றவற்றுக்கான கூட்டாட்சிச்சட்டம் (FIFRA), நச்சுப் பதார்த்தங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் (TSCA) போன்ற சட்டங்களைப் பூர்வீகக் குடிகளின் பிரதேசங்களில் அமுலாக்கம் செய்யும் அதிகாரத்தை ஒக்லஹோமா மாநிலத்துக்கு அந்த அமைப்பு வழங்கியிருந்தது.

போர்மல்டிஹைட் (formaldyhyde), பாதரசம், ஈயம், அஸ்பெஸ்ரஸ், நச்சுத்தன்மை வாய்ந்த காற்று மாசுபடுத்திகள், நச்சுத்தன்மை வாய்ந்த பூச்சி கொல்லிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆபத்தான கழிவுகளை வீசவும், பெற்றோலியத்தை எடுக்கும் நோக்குடன் நிலக்கீழ்ப் பாறைகளை துளைத்து அதிவேகமாக அவற்றுக்குள் திரவங்களைச் செலுத்தும் செயற்பாட்டை மேற்பார்வை செய்யவும், பூர்வீகப் பிரதேசங்களிலுள்ள தரை மற்றும் தண்ணீரை மாசுபடுத்தக் கூடிய சிறுநீர், மலம் கழிக்கின்ற பெருநிறுவனங்களுக்குச் சொந்தமான கால்நடை வளர்ப்பு போன்ற வற்றுக்கான அனுமதியை அதிபர் ட்ரம்பின் நிர்வாகம் ஒக்லஹோமா மாநிலத்துக்கு வழங்கி யிருக்கிறது.

உண்மையில், பூர்வீக மக்களின் தாயகப் பிரதேசங்களின் எல்லைக்குட்பட்ட நிலங்களை முற்று முழுதாக நச்சுத்தன்மை வாய்ந்ததாக மாற்றி, மனிதர்கள் அறவே குடியிருக்க முடியாத, கழிவுகள் நிறைந்த, நச்சுத்தன்மை வாய்ந்த நிலங்களாக அவற்றை மாற்றுவதற்கான முழுமையான அனுமதியை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒக்லஹோமா மாநிலத்துக்கு அளித்திருக்கிறது. ‘மக்கேட்’ தீர்ப்பே மாநிலத்தின் கோரிக்கைக்குத் தூண்டுகோலாயிருந்ததென்று ஆளுநர் ஸ்ரிற்றுக்கு எழுதிய கடிதத்தில், ட்ரம்ப் நிர்வாகத்தில் சுற்றுச்சூழல்பாதுகாப்புஅமைப்பின்நிர்வாகஅதிகாரியாக இருக்கின்ற அன்ட்ரூ வீலர் (Andrew Wheeler) தெரிவித்திருக்கிறார். பூர்வீகக் குடிகளின் நிலங்கள் மீது சுற்றுச்சூழல் தொடர்பான விடயங்களில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை ஒக்லஹோமா மாநிலத்துக்கு கையளிப்பதன் மூலம், மக்கேட் தீர்ப்பு வருவதற்கு முன்னர் ஒக்லஹோமா மாநிலம் கொண்டிருந்த புவியியல் அதிகாரத்தை மீண்டும் அடைவதற்கான உதவியை வழங்கி, மக்கேட் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்படமுடியாத ஒரு சூழ்நிலையை வீலர் (Wheeler) ஏற்படுத்தியிருக்கிறார்.

ஒக்லஹோமா மாநிலத்தில் 39 தேசிய உரிமை கொண்ட பூர்வீக மக்கள் கூட்டங்கள் இருக்கின்றன. மாநிலத்தில் ‘பூர்வீக அமெரிக்கர்கள்’ என்று தம்மை அடையாளப்படுத்துகின்ற ஐந்து இலட்சம் மக்கள் கூட்டாட்சி அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குடிகளுள் ஒன்றுடனாவது இணைந்திருப்பார்கள். முக்கேட் - ஒக்லஹோமா தீர்ப்பை வேண்டுமென்றே வலுவிழக்கச் செய்கின்ற ட்ரம்ப் நிர்வாகத்தின் செயற்பாடு, உண்மையில் பூர்வீகக் குடிகளின் இறைமையை முற்றாகக் குழிதோண்டிப் புதை க்கின்ற ஒரு நடவடிக்கையேயாகும். என்றுமே சீர்செய்துவிட முடியாத பாதிப்புகளை ஒக்லஹோமாவில வாழுகின்ற பூர்வீகக் குடிகளுக்கு இது ஏற்படு த்தப்போகின்றது. அவர்களது வாழ்க்கைத் தரத்தைக் குறைப்பதற்கும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வரிவருமானம், தூயநீர் போன்ற அவர்களது வளங்களைச் சூறையாடுவதற்கும் அப்பால் இனவழிப்புக்கு ஒப்பானவிதத்தில் அவர்களது உடல்நலத்துக்கும் பாதுகாப்புக்கும் பாரதூரமான அச்சுறுத்தலை இது ஏற்படுத்தியிருக்கிறது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தடத்திற்கு தடை ... தொடர்ச்சி...

கள் தீவிரவாத செயல்களில் ஈடுபடவில்லை என்று கூறுகிறது. ஆனால் நாம் தீவிரவாத செயல்கள் போன்ற வேறு எந்த செயல்களிலும் ஈடுபடவில்லை என்று நிரூபிக்க வேண்டும். இயக்கத்தை தடை செய்வதற்கு விதிக்கப்பட்ட எவ்வித செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், தூண்டவில்லை என்றும் தரவுகளுடன் வாதிட வேண்டும். தடைக்கு கொடுக்கப்பட்ட காரணங்கள் மட்டும் தவறானவை என்று வாதிட்டார்கள். அதை கடந்து விடுதலைப் புலிகளது விடுதலைப் போராட்டத்தின் கூறுகளையும் பண்புகளையும் வெளிக் கொணரவில்லை. சுவிசு நாட்டு தீர்ப்பு, இத்தாலிய தீர்ப்பு, ஐரோப்பிய ஒன்றிய தீர்ப்பு போன்று முழுமையான ஒரு தீர்ப்பாக இந்த தீர்ப்பை கருத முடியாது.

**மூன்று.** இந்தத் தீர்ப்பில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தரமற்ற தரவுகளும் குற்றச்சாட்டுகளும் ஏராளமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தரமுள்ள ஆதாரங்கள் இடம்பெறவில்லை. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கொடுக்கவில்லையா? அல்லது சட்டத்தரணிகள் அவற்றை பயன்படுத்தவில்லையா? அல்லது ஆதாரங்கள் கொடுக்கப்பட்டு அவை தீர்ப்பில் பதியப்படவில்லையா? இங்கு தெளிவில்லை. ஒருவர் குற்றவாளி இல்லை என்று கூறுவதோடு அவரின் நன்மைத் தனத்தையும் பதிவு செய்ய வேண்டும்.

நான்கு. இலக்கை அடைய வேண்டுமென்றால், நாம் எடுக்கின்ற வழிமுறைகள் எவருக்கும் தெரியாமல் அமைதியாக அடக்கமாக செய்து முழுமையான வெற்றி வரும்வரை காத்திருக்க வேண்டும். இல்லையென்றால், நாம் எடுக்கும் தடத்திற்கு நாமே தடையாக மாறி விடுவோம். 'தவளை தன் வாயாலே கெடும்' என்ற செயலுக்கு ஒத்துப் போகுமாறு செயற்படக் கூடாது. ஏனென்றால், உதவி செய்பவர்களைவிட தடைபோடுகின்றவர்கள் ஏராளமாக வாழும் மண்ணில் வாழ்கிறோம்.

**ஐந்து.** நமது முன்னிலையில் நாம், நமது இயக்கம் இல்லாமல் உரிமைக்காக போராடி, மடிந்த போராளிகளும், கொலை செய்யப்பட்ட அப்பாவிகளும் நம்முன் இருக்க வேண்டும். இவர்கள்தான் நமது இயக்கத்தின் வழிகாட்டிகள் என்று உணர்ந்து செயல்பட வேண்டும். தடங்களுக்கு தடையாக மாறாமல் தடங்களை உருவாக்க தன்மானத்துடன் செயற்படுவோம்.

• • •

## பூர்வீகக் குடிமக்கள் ... தொடர்ச்சி...

சுற்றுச்சூழல் ஆர்வலரும் ஒக்லஹோமா வின் பொங்கா பூர்வீகக்குடியின் உறுப்பினருமான கேசி காம்ப்-ஹொறினெக் *(Casey Camp-Horinek)* வீலரின் கடிதம் தொடர்பாகப் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:

'500 வருடங்களுக்கு மேலாகத் தொடர்கின்ற அடக்குமுறைகள், பொய்கள், இனவழிப்பு, சூழலழிப்பு, மீறப்பட்ட வாக்குறுதிகள் என்பவற்றுக்குப் பின்னர் ஒக்லஹோமாவின் இனவாதி ஆளுநரான ஸ்றிற் சார்பாகவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு தீர்மானம் எடுக்கும் என்பதை நாம் உண்மையில் எதிர்பார்த்திருக்க வேண்டும். இருப்பினும் இது எங்களால் சீரணிக்க முடியாத ஒரு விடயமாகவே இருக்கிறது. ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ், கடைசி மூச்சை இழுக்கின்ற புதைபடிவ எரிபொருள் தொழிலைப் பாதுகாப்பதற்காகவே எல்லாவிதமான சுற்றுச்சூழல் பாதுகாப்பும் அழித்தொழிக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இவற்றால்பாதிக்கப்படுவதுயார்? எல்லாம்பாதிக்கப்படுகிறது. எல்லாரும்பாதிக்கப்படுகிறார்கள். இதனால் நன்மை அடைவது யார்? ட்ரம்பும் அவரது கூட்டாளிகளும், எண்ணெய், வாயு என்பவற்றால் அதிக வருவாயைப் பெறுகின்றவர்களும் காலநிலை மாற்றத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களுமான ஆளுநர் ஸ்றிற், செனட்டர்களான இன்ஹொவ் *(Inhofe)* லாங்போட்*(Langford)* ஆகியோராவர். திரைமறைவில் மேற்கொள்ளப்பட்ட இத் தீர்மானத்தை எதிர்த்து நிச்சயமாக நாம் போராட வேண்டும். நீதிமன்றங்கள், பன்னாட்டு நீதிமன்றங்கள் போன்ற எல்லாத் தளங்களிலும் நாம் போராட வேண்டும். உண்மையில் எமது வாழ்க்கையே ஒரு ஆபத்தான நிலையை அடைந்திருக்கிறது.

இந்த நிகழ்வுகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. நீதிபரிபாலன ரீதியில் 'மக்கேட்' தீர்ப்பு ஏற்படு;த்தக்கூடிய தாக்கங்களை முற்றுமுழுதாக முறியடிப்பதற்கு, சட்டங்களை எப்படி சிறப்பாகக் கையாளலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுவதற்காக நீதித் திணைக்களத்தின் தலைவரான வில்லியம் பார் *(William Barr)* ஒக்லஹோமா மாநிலத்துக்கு வருகை தந்திருந்தார். அங்கு வந்திருந்த நேரத்தில் மக்கேட் தீர்ப்பினால் நேரடியான நன்மையடைந்த முஸ்கோகீ பழங்குடி இனமக்களை இழிவுபடுத்தும் வகையில் அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

நம்புவதற்கு கடினமாக இருந்தாலும்கூட, உச்ச நீதிமன்றத்தின் முடிவை ஒரு அமெரிக்க அதிபர் நிர்வாகம் ஏற்றுக்கொள்ள மறுத்தது இது முதற்தடவை அல்ல. அதிபர் ட்ரம்ப்பின் அபிமானத்துக்குரிய முன்னாள் அதிபரான *(1829 - 1837)* அன்ட்ரூ ஜாக்சன் *(Andrew Jackson)*, வோசெஸ்டர் - ஜோர்ஜியா என்ற மாநிலங்களுக்கிடையான விடயத்தில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்க மறுத்ததுடன், ஒப்பந்தச் சட்டத்தையும் மீறியிருந்தார். சட்டத்தை அவர் அவமதித்ததன் காரணமாக ஆயிரக்கணக்கான செரோக்கி *(Cheokee)* இனமக்கள் பசியாலும் நோய்களாலும் சொல்லொணாத் துன்பங்களுக்குள்ளாகி, ஒக்ல ஹோமாவுக்கு பலவந்தமாகக் கொண்டு வரப்பட்டு சீரற்ற காலநிலைகளால் பாதிக்கப்பட்டு இறந்தார்கள்.

சுற்றுச்சூழல் ஒழுங்கமைப்புகளைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய ஆற்றலைக் காலனீய அரசுகள் கொண்டிருப்பதில்லை என்பதைக் காலங்காலமாக நாங்கள் கண்டிருக்கிறோம். நிலம், காற்று, நீர் போன்றவற்றை பேராசையுடன், அவதானமில்லாது, தூரநோக்கில்லாது, அழிவை நோக்கிய விதத்தில் மேலாண்மை செய்யும் அவர்களது தன்மை, காலநிலை தொடர்பான ஒரு ஆபத்தான நிலைக்கு உலகத்தைத் இட்டுச் சென்றிருப்பதோடு, மனிதகுலம் உயிர்பிழைப்பதையே கேள்விக்குரியதாக மாற்றியிருக்கிறது. அனைவருக்கும் நன்மையைத் தரக்கூடிய விதத்தில் உயர்வான முறையில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் பூர்வீகக் குடிகள் கொண்டிருக்கின்ற ஆற்றலைக் கண்டு மேற்கத்தைய விஞ்ஞானிகளே வியந்திருக்கிறார்கள். பூர்வீகக் குடிகள் சூழலைப் பாதுகாக்கும் முறைகளைப் பின்பற்றி நடக்கவும், தேவைப்பட்டால் நிலத்தை அவர்களிடமே கையளிப்பதையும் அவர்கள் ஊக்குவிக்கிறார்கள். இந்த முயற்சி தொடர்பாக ஒக்லஹோமாவின் பூர்வீகக் குடிகள் ட்ரம்ப் நிர்வாகத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கிறார்களா அல்லது சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு ஒக்லஹோமா மாநிலத்துக்கு சுற்றுச்சூழல் தொடர்பாக நடவடிக்கை அனுமதிகொடுக்கப்பட்ட பயன்பட்ட சட்டத்தை மீளப்பெறும் படி அமெரிக்க காங்கிரசைக் கோருவார்களா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இது எவ்வாறாக இருப்பினும், இப்படிப்பட்ட நடவடிக்கைகள் பூர்வீக மக்கள் தேசியங்கள் அனைத்தையுமே அச்சத்துக்குள்ளாக்கக் கூடிய முன்னுதாரணங்களாகும். எமது பூர்வீக நிலங்களை அழித்தொழிப்பது உண்மையில் போர் தொடுப்பதற்குச் சமனான ஒரு விடயமாகும். நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுப் பொருட்களின் நடுவில் நச்சுத்தன்மை வாய்ந்த நீரைக் குடித்துக்கொண்டு, அசுத்தமான காற்றைச் சுவாசித்துக்கொண்டு எமது பிள்ளைகளால் எப்படி உயிர் வாழ முடியும்?

**நன்றி: அல்ஜசீரா**

• • •

## கொரோனாவிலிருந்து ... தொடர்ச்சி..

போது, அதை வெற்றிகரமாக எதிர்கொண்ட நாடுகள் முழு நாட்டையும் சில வாரங்கள் முழுமையாக அடைத்து வைப்பதன் மூலமே அலையை கட்டுப்படுத்தியிருக்கின்றன.

ஏனைய நாடுகளின் அனுபவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளாமல், ரோமா புரி எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசித்து கொண்டிருந்தது போல, இலங்கையில் அலை ஏற்படும் போது மருத்துவர்களின் ஆலோசனையை கேளாது 20ஆவது சட்ட திருத்தத்தில் மூழ்கி இருந்து விட்டு இன்னமும் சரியான உபாயங்களைப் பின்பற்றாமல் இருப்பது வருத்தமளிக்கிறது.

இதைவிட கோவிட் நோயை கட்டுப்படுத்த ஆயுர்வேத பானத்தை தயாரித்து விட்டதாக இன்னொரு அறிவிப்பு வந்துள்ளது. *Hydroxy chloroquine* என்னும் மலேரியா மருந்தை ஆய்வு ரீதியான ஆதாரம் இல்லாமல் அமெரிக்காவில் பயன்படுத்த அனுமதித்து; பின்னர் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகள் காரணமாக அந்த மருந்தை பயன்படுத்த வேண்டாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் கோரி இருந்தது. இந்த நிலையில் இலங்கையில் எத்தனை உயிரிழப்புகள் ஏற்பட்ட பின்பு ஆயுர்வேத பானத்தை நிறுத்துவார்கள் என்ற கேள்வியும் உள்ளது.

மேலும் வீட்டிலேயே தனிமைப்படுத்தும் நடவடிக்கையை அமுல்படுத்தப்போவதாக அறிவித்துள்ளார்கள். இது எந்தவகையில் சாத்தியம் என்பது எம்மால் கூற முடியாது.

பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். கிராம மட்டங்களில் அவை குறைவாக உள்ளது. தொடர்சியாக விழிப்புணர்வு செய்து வருகிறோம். எம்மால் இயன்ற உதவிகளை, ஆலோசனைகளை வழங்கி வருகிறோம். தவறான அறிவிப்புக்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருவதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போது தான் ஆபத்தில் இருந்து தப்ப முடியும். ஆனால் நாட்டில் முறையான சட்டத்திட்டங்கள் கொண்டுவரப்பட்டு, மருத்துவர்களின் ஆலோசனைப்படி செயற்பட்டால் மாத்திரமே இந்த கோவிட்-19 தொற்றில் இருந்து இலங்கையை காப்பாற்றிக் கொள்ள முடியும். இல்லை என்றால் வரப்போகும் பெரும் அழிவை தவிர்க்க முடியாது.

• • •

## யாழ்.குடாநாட்டு ... தொடர்ச்சி..

ஆனால் நாம் வரலாறுகளை வெறுமனவே கடந்து செல்லாது, அது ஏற்பட்டதன் காரணம், அது ஏன் அனைத்துலக சமூகத்தின் கவனத்தை ஈர்க்கவில்லை, அதனை சிறீலங்கா அரசு எவ்வாறு கையாண்டது, அன்றும் இன்றும் பூகோள அரசியலில் எமது முக்கியத்துவம் என்ன? 1995 ஆம் ஆண்டு ஏற்பட்டதே, 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலிலும் ஏற்பட்டது என்றால் அது தொடர்வதற்கான காரணம் என்ன என்பதை அறிவதும், எமது வரலாறுகளின் பாடத்தை இளைய சமுதாயத்திடம் தெளிவான சிந்தனையுடன் விட்டுச் செல்வதும் தான் நாம் தொடர்ந்து முன்னெடுத்து வரும் விடுதலைப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும்.

உதாரணமாக இஸ்ரேலினால் இடிக்கப்பட்ட வீடுகளின்சாவிகளைஇளையசமூதாயத்திடம் கையளிக்கும் போராட்டம் ஒன்றையும் பலஸ்தீன மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதன் மூலம் தான் தாம் எதிர்கொண்ட இனப்படுகொலையின் வடுக்களை நினைவில் நிறுத்துவதுடன், விடுதலைக்கான அவசியத்தையும் தமது அடுத்த தலைமுறையிடம் விட்டுச் செல்ல முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.


• • •



# நேரமற்ற வாழ்வில் நித்திரையின் பங்கு

இன்றைய காலகட்டத்தில் அனைத்துப் பொருட்களையும், இயற்கையான முறையிலோ, செயற்கையான முறையிலோ விலை கொடுத்து வாங்கக் கூடியதாக உள்ளது. இருப்பினும் உலகில் இருக்கும் அனைத்து உயிரினங்களுக்கும், அவற்றின் ஆரோக்கியத்திற்கும் அவசியமான, நிம்மதியான சுகமான உறக்கத்தை விலை கொடுத்து வாங்கிவிட முடியாது.

ஒவ்வொரு மனிதனது நிம்மதியற்ற உறக்கத்திற்கு ஸ்மாட் தொலைபேசி, மடிக்கணினி, தொலைக்காட்சி போன்ற நவீன தொழில்நுட்ப சாதனங்களே காரணமாக அமைகின்றன. “அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு” என்ற பழமொழிக்கிணங்க இச்சாதனங்களை அளவிற்கு அதிகமாகப் பயன்படுத்துவதனால், உறக்கத்தினை விலையாகக் கொடுத்து உடல் உபாதைகளை பரிசாகப் பெறுகின்றனர்.



இதேபோல, கடுமையான மன அழுத்தங்கள், நெருக்கடியான வாழ்க்கைச் சூழல், பணி நிமித்தம் அடிக்கடி ஏற்படும் உடல் உபாதைகள், எண்ணில் அடங்காத மருந்து மாத்திரைகள் போன்றவையும் உறக்கத்தைப் பாதிக்கின்றன.

இயற்கையின் அமைப்பில் சூரியனும், சந்திரனும் பகல், இரவு என்னும் சுழற்சியை சீராகச் செயற்படுத்துவது போல, நம்முடைய உடலிலும் செயல்களைச் சீராக்கும் *Circardian clock* என்னும் கடிகாரம் மூளையில் செயற்படுகின்றது. அந்த அகச் சுழற்சி சரியாக இயங்குவதற்கு ஆரோக்கியமான, ஆழமான உறக்கம் அவசியம். உடல் தொழிலியலின்படி இரவின் கொடை மெலட்ரோனின் *(Melatonin)* என்றால் மிகையாகாது. இது மூளை யில் காணப் படும் பீனியல் சுரப்பியினால் *(Pineal gland)* விடுவிக் கப்படும். நிலவின் மயிடில் உறங் கும் போது சுரக்கப் படும் மெலட்ரோனின் ஓமோன் எமது உறக்கம், விழிப்பு நிலைகளை *(sleep – wake cycle)* கட்டுப்படுத்தவும், இரத்த அழுத்தத்தை முறைப் படுத்தவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. தூக்கமின்மையால் ஏற்படும் உடலியல் மாறுபாடு நோய்களுக்கு வரவேற்பளிக்கின்றது. இதன் விளைவாக தலைப்பாரம், உடல்வலி, சோம்பல், உண்ட உணவு செரியாமை, இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய், இருதய நோய், மயக்கம், உடல் பருமன், தெளிவற்ற மன நிலை போன்ற பெரும்பாலான தொற்றா நோய்கள் ஏற்படுகின்றன. இரவில் தூங்காமல் அதை ஈடு கட்ட பகலில் தூங்குவது வழமையாகி விட்டது. இரவில் கண் விழிப்பவர்களுக்கு *circadian rhythm* சார்ந்த கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ள து.

உறக்கம் சார்பாக தற்காலத்தில் அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாக சித்தர்கள் “சித்திமய கஞ்செறிவும், ஐம்புலத் தயக்கம்” எனக் கூறியுள்ளார்கள். அதாவது நித்திரைக் குழப்பத்தினால் மயக்கமும், சோர்வும் உண்டாகும் என்பதே இதன் பொருளாகும். ஆரோக்கியமான உறங்கும் நெறி பற்றி சித்த மருத்துவம் வரையறுத்தி நிற்கிறது.

**“தன் ஊர் கிழக்குத்தான்**
**தங்கின ஊர் மேற்கு என்றும்**
**வேட்டகம் தெற்கு என்று உனக்குச்**
**சொன்னேன் வேண்டா ஊர் வடக்கு”**

என்னும் பாடல் வரிகள் எக்காரணத்தைக் கொண்டும் வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாதென்கிறது. தாம் வாழும் வீட்டில் கிழக்கே தலை வைத்து, இடது புறம் உடல் கீழே இருக்குமாறு அல்லது நிமிர்ந்து உறங்கலாம். இதனால் வடக்கிலிருந்து வரும் காந்த சக்தியினால் முதுகுத்தண்டு வலுவடையும. கைகால்களில் வீக்கம், வலி, போன்றன வராது. மல்லாந்து படுத்து அதிக நேரம் உறங்கக் கூடாது. இது சமிபாட்டிற்கு இடையூறாக இருக்கும். சிறுநீரகங்கள் மீது அழுத்தம் ஏற்படுத்தும். இடது புறமாக சரிந்து, கால்களைச்

**உ.மதுஜா**

சுருட்டி மடக்காமல் உறங்க வேண்டும். இருதயத்திற்கும் அதன் பாகங்களுக்கும் தேவையான பிராண வாயுவும், இரத்தமும் சுலபமாகக் கிடைக்க இடது புறம் சரிந்து படுத்தல் உதவுகின்றது. மலச்சிக்கல் ஏற்படாமலும் தடுக்கின்றது.

நாம் விடும் மூச்சுக் காற்று இடது நாசியால் செல்லும் போது அதற்குச் சத்திர கலை என்றும், வலது நாசியால் செல்லும் போது சூரியக் கலை என்றும் கூறப்படுகின்றது. நாம் வலது பக்கம் சரிந்து படுத்ததால், இடது நாசியிலும் இடது பக்கம் சரிந்து படுத்தால் வலது நாசியிலும் சுவாசம் நடைபெறும். இடது பக்கம் சாய்ந்து படுக்கும் பொழுது சூரியக்கலையின் சுவாசம் உடலுக்கு உஷ்ணத்தைக் கொடுத்து, உண்ட உணவு இலகுவாக சமிபா டடைய உதவுகின்றது.



வெறும் தரையில் உறங்கக் கூடாது. பாய் போன்ற விரிப்பின் மீது தான் படுக்க வேண்டும். தலையணை மிக உயரமாக வைக்கக் கூடாது. இலவம் பஞ்சாலான தலையணை பாவிப்பது சிறந்தது. குறுகால உறக்கம் என்றாலும், ஆழ்ந்த உறக்கம் வேண்டும். மனமும் உடலும் தான் செய்த முயற்சியின் அளவிற்கு ஏற்ற வகையில் இளைப்பாற வேண்டும். மனதையும், உடலையும் இளைப்பாற்றுவது உறக்கம் மட்டுமே. இரவின் பின் பகுதியில் உறங்குவதைக் காட்டிலும் முற்பகுதியில் உறங்குவது ஆரோக்கியத்திற்கு நல்லது.

நிம்மதியான தூக்கத்தைப்பெற கடைப்பிடிக்க வேண்டிய வழிகள் சில:

**• நித்திரைக்குச் செல்லும் முன் சாதிக்காய் த்தூள் சிறிதளவு பாலுடன் கலந்து பருகலாம்.**

**• பாலுடன் சிறிது கசகசா சேர்த்து அருந்தலாம். திராட்சை, தக்காளிப்பழங்களில் இயற்கையாகவே ஓரளவு மெலரோனின் காணப் படுகின்றது. அன்னாசி, தோடை, வாழைப்பழம் போன்றன மெரோனின் உற்பத்தியைத் தூண்டுவதனால், இவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.**

**• உறக்கக் குழப்பம் உடையவர்கள் மருதாணிப் பூவை தலையணையின் அடியில் வைத்து உறங்கலாம்.**

**• எண்ணெய் தேய்த்து தலையில் குளித்துவர உறக்கம் சீராகும்.**

**• மனதை அமைதிப்படுத்த தியானப் பயிற்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட சில யோகாசனங்கள், நடைப் பயிற்சி போன்றவற்றை மேற்கொள்ளலாம்.**

**• மனதிற்கு இதமான இசையை இரசிக்கலாம்.**

**• உறங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு மடிக்கணினி, தொலைபேசி, தொலைக்காட்சியில் மூழ்குவதைத் தவிர்க்கலாம்.**

**• உறங்கும் சூழல் அமைதியானதாகவும், வெளிச்சம் அதிகம் இல்லாமலும் இருக்க வேண்டும்.**

குழந்தைகள் 10 – 15 மணி நேரமும், 5 – 15 வயதுடையவர்கள் 8 – 10 மணி நேரமும், 16 – 30 வயதுவரை உள்ளவர்கள் 7 மணி நேரமும், 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் 8 மணி நேரமும் நாளொன்றில் உறங்க வேண்டியது அவசியமாகின்றது.

ஒவ்வொரு வருடமும் மார்ச்15 அன்று உலக உறக்க தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வருடத்தின் இந்த ஒரு நாள் நம்முடைய அவசர வாழ்க்கையில் நிராகரிக்கப்படும் உறக்கத்தின் முக்கியத்துவத்தை உலகிற்கு உரக்கச் சொல்லும் வாய்ப்பாக அமைகின்றது. எனவே அதி நித்திரையைத் தவிர்த்து, பகல் தூக்கத்தைத் தொலைத்து, வயதிற்குத் தகுந்தாற் போல நேரத்திற்கு மன அமைதியுடன், மென்மையாக உறங்குவோம்.

• • •

**கூட்டமைப்பின் ... தொடர்ச்சி...**

கள் அனைத்தும் செயலாளர்களை அறிவிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டதாகத் தெரிவித்தார்.

இதையடுத்தே, பங்காளிக் கட்சிகள் மாவை. சேனாதிராசாவை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளராக நியமிப்பதற்கு தீர்மானித்தன. தலைவராக இரா.சம்பந்தன் தொடர்ந்தும் செயற்படுவார்.

**எதிர்வரும் வருட ... தொடர்ச்சி...**

சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

வைரசின் தாக்கத்தினால் அதிகம் பாதிக்கப்படும் சாந்தியங்கள் உள்ளவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தடுப்பு மருந்துகள் அடுத்த வருடத்தின் முற்பகுதியில் வழக்கப்படும் எனவும் உலக சுகாதார நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.